விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 13 செவ்வாய்க்கிழமை (29.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284




# நலன்புரி முகாம்களிலுள்ள மக்களுக்கு நடமாடும் சுதந்திரம் வழங்க முடியாது

## புலிகளும் இருப்பதாக அமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாம்களுக்குள் மக்களுடன் மக்களாகப் புலிகளும் மறைந்து வாழ்வதால், அங்குள்ள மக்களுக்கு முழுமையான நடமாட்ட சுதந்திரத்தை உடனடியாக வழங்க முடியாது என மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். (14ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

அநுராதபுரம் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுவிக்கக் கோரி நேற்றுத் திங்கட்கிழமை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்கும் அவர்கள் கடிதம் அனுப்பியுள்ளனர்.

நாங்கள் கடந்த 2 வருட முதல் 5 வருடங்கள் வரையாக பலர் விசாரணை எதுவுமில்லாமல் தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும்,

ஆகவே பொதுமன்னிப்பு வழங்கி தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி, நீதி அமைச்சர் உட்பட பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தொடர்ச்சியாக (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகள் பஸ் இன்று காலை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை இன்று முதல் காலை 9 மணிக்கு வவுனியா நகரிலிருந்து ஆரம்பிக்கும் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தகவல் தருகையில்;

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை இன்று முதல் காலை 9 மணிக்கு வவுனியா நகரிலிருந்து ஆரம்பமாகும்.

இந்த சேவையில் வடபிராந்திய போக்குவரத் துச்சபையின் 10 பஸ்கள் ஈடுபடும் என்றார்.

இதேவேளை ஏ-9 பாதையூடாக வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்காக பயணிகள் பஸ்சேவையை காலை 9 மணிக்கு ஆரம்பிக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி முன்னர் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இது வரை காலமும் வவுனியாவிலிருந்து மாலை 5.30 மணிக்குப் பின்னரே பஸ்கள் யாழ். நோக்கி புறப்படுவதால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தீவகத்தைச் சேர்ந்த 627 பேர் நேற்று அழைத்துவரப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தீவகத்தைச் சேர்ந்த 627 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டு வேலணை மற்றும் காரைநகரிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள் என யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இம்மக்கள் இன்று கடற்படையினரின் அனுமதி கிடைத்ததும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து நாளையும் தீவகத்தைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவார்கள் என்று யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து நேற்று அழைத்து வரப்பட்டவர்களில் (14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபையின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நாளை சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

இந்நிகழ்வு நாளைக் காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் இச்சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 8 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பொலிஸ் சேவைக்கு ஆட்களை இணைக்கும் முதலாம் கட்டத்தேர்வில் 880 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட இளைஞர் யுவதிகளை பொலிஸ் சேவைக்கு இணைக்கும் திட்டத்தில் நேற்று நடைபெற்ற முதல் கட்ட தேர்வில் 880 பேர் தெரிவாகியுள்ளனர் என யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மாரப்பன தெரிவித் தார்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இன்று நேர்முகப் பரீட்சை மற்றும் எழுத்து ப் பரீட்சை என்பவற்றை நடத்தி அதில் சித்தி பெறும் 500 பேர் பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மாரப்பன கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட இளைஞர் யுவதிகளை பொலிஸ் சேவைக்கு இணைக்கும் திட்டத்தில் நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கிலும் சாவ கச்சேரி, பருத்தித்துறை, தெல்லிப்பழை, ஊர்காவற்துறை பொலிஸ் நிலையங்களிலும் நடைபெற்ற முதல்கட்ட தேர்வில் 6 ஆயி ரத்து 400 பேர் பங்குபற்றியிருந்தார்கள்.

இதில் பலர் திருமணமானவர்கள் என்ப துடன் 28 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் (14ஆம் பக்கம் பார்க்க)






அபிவிருத்தி அதிர்ஷ்ட டிக்கட், 2009ம் ஆண்டு மார்ச் மாதம் 21ந் திகதி முதல், புதிய தோற்றத்துடன் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளது.

வாடிக்கையாளர்களின் விசுவாசத்தை மேலும் மேலும் அதிகரிக்கும் நோக்கில் டிக்கட்டின் முகப்பில் சீட்டிழுப்பு தின முத்திரை பதிக்கப்பட்டிருக்கும்

# இந்து நாகரிகம், இந்து சமய ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் 12,13 ஆம் தரங்களில் இந்துநாகரிகம், இந்துசமயம் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு இன்றும் நாளையும் காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய வள மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வில் அறிவிக்கப்பட்ட ஆசிரியர்கள் தவறாது சமுகமளிப்பதுடன் புதிய பாடத்திட்டம் பகுதி 1 இற்கான மாதிரி வினாத்தாள் தயாரிப்பதற்கான ஒழுங்குடனும் வருகைதருமாறும் அவர் கேட்டுள்ளார். (ந-3,29)

# ஆயுர்வேத ஆண்டாக 2010 பிரகடனம்

(கொழும்பு)

சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கமைய 2010 ஆம் ஆண்டு ஆயுர்வேத ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் அடுத்த வருடம் ஆயுர்வேத ஆண்டாகவும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் ஆயுர்வேத மாதமாகவும் தமிழ்-சிங்கள புத்தாண்டு மரபுகளின்படி மருத்தெண்ணெய் ஸ்நானம் செய்யும் திகதியை ஆயுர்வேத தினமாகவும் பெயரிடப்பட்டுள்ளது.

• இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள ஆயுர்வேத, சித்த, யூனானி மற்றும் சுதேச மருத்துவ முறை ஆகிய பிரிவுகள் சுதேச அமைச்சின் கீழ் ஆயுர்வேத ஆண்டின் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களைப் பல பிரிவுகளாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (ந)

## சைவ சமய விவகாரக் குழுவின்

# பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் இவ்வருடம் நடத்தப்படவுள்ள தரம்04 முதல் 13 வரையான பரீட்சைகளுக்கான விண்ணப்ப படிவங்கள் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு தபால் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் யாழ்.மாநகர ஆணையாளருமான மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் யாவும் எதிர்வரும் ஒக்டோபர் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டுமெனவும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பபடிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் அவர் அறிவித்துள்ளார்.

சமய அறிவுப் பரீட்சைகள் நவம்பர் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அனைவரும் தாம் தற்போது கல்வி பயிலும் பாடசாலையிலேயே பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச-3)

## உடுவில் மகளிர் கல்லூரிப் பிரச்சினை

# அனைத்துத் தரப்பினருடனும் பேசி இணக்கம் ஏற்படுத்த அமைச்சர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையை அனைத்துத் தரப்புகளுடன் தொடர்ந்து கலந்துரையாடி அனைத்துத் தரப்பினரதும் இணக்கப்பாட்டுடன் ஒரு முடிபுக்குக் கொண்டுவர இருப்பதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றுக் காலை உடுவில் மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்து மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனக்கு நெருக்கமானவர்களாக இருந்தாலும் அவர்கள் தவறு செய்தால் அதனை ஒருபோதும் தான் ஏற்றுக் கொள்ள போவதில்லை என்றும் நியாயத்தின் பக்கமே எப்போதும் தான் இருப்பேன் என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர், இப்பிரச்சினைக்கு சுமூகமானதொரு முடிபைக் காணும் வரையில் பாடசாலைக் கல்வியைத் தொடருவது அல்லது தொடராதிருப்பது குறித்து மாணவிகளும் ஆசிரியர்களும் கூடி ஒரு முடிபுக்கு வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை பாடசாலை, மாணவிகள் ஆசிரியர்கள், பழைய மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் தனித் தனியாக கையொப்பமிட்ட மகஜர்களை நேற்று மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்துள்ளனர்.

முன்பிருந்த அதிபரை மீண்டும் நியமிக்கும் வரை கற்பித்தல் நடவடிக்கைகளைத் தொடரப்போவதில்லை என ஆசிரியர்களும் பாடசாலைக்கு சமுகமளிக்கப் போவதில்லை என மாணவிகளும் மாணவிகளை பாடசாலைக்கு அனுப்பப் போவதில்லை என பெற்றோர்களும் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். (ச-5)

# நிறுவனத்தலைவர்களிற்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர் வரும் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ந)

# நிர்மாணிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

(வடமராட்சி)

யாழ்.மாவட்ட நிர்மாணிகள் சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27.09.2009) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டத்திலுள்ள ஒப்பந்தகாரர்களுடனான கலந்துரையாடல் ஒன்று மேற்குறித்த தினம் ஆனைப்பந்திச் சந்தியிலுள்ள நிர்மாணிகள் சங்க அலுவலகக் கட்டடத்தில் நடைபெற்றபோது நிர்மாணிகள் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன்போது புதிய நிர்வாகிகள் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர். இக் கலந்துரையாடலில் வீதி, கட்டடம், குளம் போன்ற வேலைகளைச்செய்யும் ஒப்பந்தகாரர்கள் பலர் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றங்களும் செய்து கொண்டனர்.

இக் கருத்துப் பரிமாற்றத்தின்போது ஒப்பந்தகாரர்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகள், தொழில் பாதிப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டது. இப் புதிய நிர்மாணிகள் சங்கம் ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் செயற்படவுள்ளது. (ந-10)

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

சேவை வினைதிறன் விருத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சியின் போது முன்பு பயிற்சி நெறியில் கலந்து கொள்ளாதவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாகவும் வட மாகாண யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச அரசசார்பற்ற தனியார் நிறுவனங்கள் தொழிற்பயிற்சி நெறி ஒன்றினை மேற்கொள்வதாயின் மாவட்ட செயலகத்தில் அனுமதி பெற்ற பின்னரே பயிற்சி நெறியினை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி பெறுவதற்கு தொழிற் பயிற்சிகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் அனைத்தும் 07.09.1995 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவுறுத்தலுக்கமைய 3ஆம் நிலை தொழிற்பயிற்சி ஆணைக்குழுவில் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் செயல்படுகின்ற தொழிற் பயிற்சி நிலையங்கள் மாவட்ட தொழிற்பயிற்சி கண்காணிப்பு பிரிவினூடாக விண்ணப்ப படிவத்தைப் பெற்று பதிவினை மேற்கொள்ளலாமெனவும் இயங்குகின்ற அனைத்து தொழிற் பயிற்சி நிறுவனங்களும் பதிவினை உறுதிப்படுத்தும்படி யாழ்.அரச அதிபரால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-30)

# பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம்

(கொழும்பு)

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இந்த ஆண்டு அடைந்துள்ள நட்டத்தைத் தொடர்ந்து அந்த நிறுவனம் தொடர்ந்தும் இயங்க முடியுமா என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 420 மில்லியன் ரூபாய் இலாபம் பெற்றதற்குப் பதில் 2009ஆம் ஆண்டு 9ஆயிரத்து 305 மில்லியன் ரூபாய் நட்டம் அடைந்துள்ளது.

வானூர்தி நிறுவனத்தின் கணக்கு அறிக்கையை ஆய்வு செய்த ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் நிறுவனம் ஒரே ஆண்டில் ஏற்பட்ட இந்த மிகப் பெரிய நட்டத்தைச் சுட்டிக்காட்டி உள்ளதுடன் நிறுவனம் தொடர்ந்து இயங்குவது குறித்த சந்தேகத்தையும் கிளப்பி உள்ளது.

நிறுவனத்தின் மொத்த வருமானம் 2008 ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 288 மில்லியன் ரூபாயாக இருந்தது. அது இந்த ஆண்டு 18.06 மில்லியன் ரூபாயாக திடீர் வீழ்ச்சியடைந்துள்ளது.

சிறிலங்கன் எயார்லையன்ஸ் நிறுவனத்தின் சொத்துக்களின் பெறுமதியை விட அதன் பற்று (கடன்) பெறுமதி அதிகரித்து விட்டது. மொத்த சொத்து மதிப்பு இன்றைய நிலையில் 16 ஆயிரத்து 852 மில்லியன் ரூபாய். மொத்தப் பொறுப்பு பெறுமதி 25 ஆயிரத்து 12 மில்லியன் ரூபாய் என கணக்கு ஆய்வு அறிக்கை கூறுகிறது.

இதனால் சொத்து மதிப்பை விட கடன் மதிப்பு 8ஆயிரத்து 160 மில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளது. நிறுவனத்தின் நிதி நிலையை பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தேவையை இது எடுத்துக் காட்டுகிறது. இல்லையேல் அது தொடர்ந்து செயற்பட முடியாத நிலையை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அமுத விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய 'பிரகாசம்' அமுதவிழா மலர் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். மலர் வெளியீட்டு உரையை வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆற்றவுள்ளார். (ச-5)

# தமிழ்த் தினப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்று வெற்றியீட்டிய பாடசாலைகள் மற்றும் மாணவர்களுக்கான மாகாண மட்டப் போட்டிகள் எதிர்வரும் 3,4 ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி சுதாமதி நந்தபாலன் அறிவித்துள்ளார். (ஓ)

# நிதியமைச்சின் செயலாளராக ஜெயசுந்தர மீண்டும் நியமனம்

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தரவை மீண்டும் நிதியமைச்சின் செயலாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். ஜயசுந்தர இந்த பதவியில் மீண்டும் நியமிக்கப்பட மாட்டார் என ஏற்கனவே அரச தரப்பு தகவல்கள் தெரிவித்திருந்தன. இந்த நிலையில் ஜனாதிபதி அவரை மீண்டும் நிதியமைச்சின் செயலாளராக நியமித்துள்ளார்.

நிதியமைச்சின் செயலாளராக பணியாற்றி வந்த சுமித் அபேசிங்க உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அமைச்சரவையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் ஜயசுந்தரவை மீண்டும் நிதியமைச்சின் செயலாளராக நியமிப்பது ஏற்புடையதல்ல என அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தமது கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் தெரிவித்திருந்தார். எனினும் ஜனாதிபதி அவரை மீண்டும் நிதியமைச்சின் செயலாளர் பொறுப்பில் இன்று அமர்த்தியுள்ளார்.

அரச நிறுவனம் ஒன்றை தனியார்மயப்படுத்தியதில் அரசாங்கத்திற்கு சார்பற்ற முறையில் நடந்து கொண்டதாக உயர்நீதி மன்றத்தினால் குற்றம் சுமத்தப்பட்ட ஜயசுந்தரவை, 5 இலட்சம் இழப்பீடு செலுத்துமாறு உத்தரவிட்ட முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான நீதியரசர்கள், தொடர்ந்து அரச பதவிகள் எதனையும் வகிக்கபோவதில்லை என சத்தியக் கடிதத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டனர்.

இதன்படி சத்தியக் கடிதத்தை சமர்பித்த அவர் அரச பதவிகளில் இருந்து விலகிக் கொண்டார். இந்த நிலையில் நாட்டுக்கு சேவையாற்றும் நோக்கில் நிதியமைச்சின் செயலாளர் பொறுப்பை ஏற்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளதாகவும் இந்த கோரிக்கையை நிறைவேற்றுவதில் நீதிமன்றத்தில் தான் சமர்ப்பித்த சத்தியக் கடிதம் தடையாக இருப்பதாகவும் இதனால் அதனை ரத்துச் செய்யுமாறு கோரி ஜயசுந்தர உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக் கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரித்த 7 பேர் கொண்ட நீதியரசர்கள் குழு அதனை ரத்துச் செய்ததுடன் மீண்டும் அரச பதவிகளை வகிக்க ஜயசுந்தரவுக்கு அனுமதி வழங்கியிருந்தது. (ந-5)

MIS கணனிக்கல்வி நிறுவனம்
(A/L) - ICT - 2011
1. Python Programming
2. Electronics
ஆரம்பம்
Sat & Sun - 4.00 pm-5.00 pm
Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)
இராமநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்
# 74, Sabapathy Lane, Thalaiyali, Pirampady, Jaffna
TPNO : 0213216083, 0776577359

# திறைசேரியின் தலைவராக ஜயசுந்தரவை மீண்டும் பதவியில் அமர்த்துவது தவறானது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

திறைசேரியின் முன்னாள் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவை மீண்டும் அப் பதவியில் அமர்த்துவது தவறானது.

அத்துடன் நாட்டின் ஒழுக்கத்தை மீறுகின்ற செயலாகும். இவ்விடயத்தில் தேசிய சுதந்திர முன்னணிக்கு உடன்பாடு இல்லை என்று அக் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி தெரிவித்துள்ளார்.

சர்வதேசம் எமதுநாட்டை அவதானித்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் பி.பி.ஜயசுந்தரவின்விடயத்தில் நீதிமன்றமும் நிறைவேற்று அதிகாரமும் இணைந்து செயற் படுகின்றன என்று அர்த்தப்பட்டு விடக்கூடாது என்பதே எமதுநிலைப்பாடு என்றும் அவர் சொன்னார். கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே விமல் வீரவன்ச எம்.பி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், நீதிமன்றங் களின் தீர்ப்பினை விமர்சிக்கவோ அது தொடர்பில் கருத்துக்களை வெளியிடவோ முடியாது.

எனினும் திறைசேரியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர தனது பதவிக் காலத்தின் போது எழுந்த சிக்கல் மற்றும் சவால்கள் காரணமாகவே அவர் பதவி இழக் கப்பட்டார்.

அவ்வாறான ஒருவர் மீண்டும் அதே பதவியில் அமர்த்தப்படுவதானது நாட்டின தும் அரசசேவையினதும் ஒழுக்கக் கோட்பாடு களுக்கு முரணானதாகும்.

அரசசேவையில் உள்வாங்கப்படுகின்ற அவர் வேறு ஒரு பதவியில் அமர்த்தப்ப டுவதை ஏற்றுக்கொண்டாலும் திறைசேரியின் செயலாளராக அமர்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. இது தவறு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சர்வதேசமே அவதானித்துக் கொண்டிருக் கும் போது அவர் குறித்த பதவியில் அமர்த் தப்படுவாராக இருந்தால் அது நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் பாதகமாகவே அமை வதாக இருக்கும். இவ்விடயத்தில் நிதானமாக செயற்படுவதே சிறந்தது என்றார். (ஓ-6)

## மூலப்பொருட்கள் இல்லாததால் வீதி அபிவிருத்தி வேலைகள் பின்னடைவு

(வடமராட்சி)

யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நான்கு என்ஜின் றோலர்கள் வந்து சேரவுள்ளன. அரச அதிபரின் துரித நடவடிக் கையையடுத்து மூன்று என்ஜின் றோலர்கள் வரவுள்ளன . மேலும் ஒரு றோலர் விரைவில் வந்து சேரவுள்ளதாக அதிகார சபை வட்டாரங் களிலிருந்து தெரியவந் துள்ளது.

யாழ் .மாவட்டத்தில் வீதி வேலைகள் தற்போது அதிகரித்துள்ளதால் அதற்குரிய இயந்திரங்கள் இல்லாததினால் அபிவிருத்தி வேலைகள் செய்வதில் பல கஷ்டங்களை ஒப்பந்தகாரர்கள் எதிர் நோக்கி வருகின்றனர். மேலும் வீதி அபிவிருத்திக்கான மூலப் பொருட்களுக்கும் பலத்த கிராக்கி ஏற்பட்டிருப் பதனால் வீதி அபிவிருத்தி வேலைகளில் பின்னடைவு காணப்படுகிறது. (ஓ-10)

## உணவு நஞ்சானதால் 40 பேர் களுபோவில் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

உணவு நஞ்சானதால் சுமார் 40 களு போவில வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் இரவு 7பேருக்கு 'வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் ஏனையோர் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தபோதே இவர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ஓ-6)

## வெளிநாடு சென்று நாடு திரும்பாத மருத்துவர்களுக்கு எதிராக வழக்கு

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுக ளுக்குச் சென்று நாடு திரும்பாத மருத்து வர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது.

மேலதிக பயிற்சிகளை பூர்த்தி செய்வதற் காக வெளிநாடு சென்றுநாடு திரும்பாத 215 மருத்துவர்களுக்கு எதிராக வழக்குத் தொ டரப்படவுள்ளது. விசேட நிபுணத்துவ பயிற் சிக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தை மீளச் செலுத்த 150 மருத் துவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் மேலதிக பயிற் சிகளுக்காக ஆயிரத்து 915 மருத்துவர்கள் வெளிநாடு சென்றுள்ளதாகவும் இதில் ஆயிரத்து 700 பேரே நாடு திரும்பியுள் ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு பயிற்சிகளுக்காக சென்ற மருத்துவர்கள் 7 முதல் 20 இலட்சம் ரூபா வரையில் அரசாங்கத்திற்கு செலுத்த நேரி டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சிக்காக வெளிநாடு சென்ற சில மருத்துவர்கள் எங்கு இருக்கின்றார்கள் எப்பதனை அறிந்து கொள்வதில் கூட சிக்கல் நிலவுவதாக சுகாதார அமைச்சு அறிவித் துள்ளது. (ஓ-6)

## யுத்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்திரிகாவை கைது செய்யத் திட்டம்

(கொழும்பு)

யுத்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்ட காரணத்திற்காக முன்னாள் இலங்கையின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கைது செய்ய சர்வதேச மனித உரிமைகள் பேரவை திட்டமிட்டுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடு ஒன்றில் வைத்து சந்திரிக் காவை கைது செய்யத் திட்டமிடப் பட்டுள் ளதாக பிரபல சிங்கள இணையத் தள மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆட்சியிலிருக்கும் நாட்டுத்தலைவர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத காரணத்தினால் சந்திரிக்காவை கைது செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் குறிப்பிடப்படுகிறது.

சந்திரிக்காவின் ஆட்சி காலத்தில் இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் 231 யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் பேரவைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

ஆட்சியிலிருக்கும் நாட்டுத் தலைவர் ஒருவருக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ப் பேரவையைத் தவிர வேறு எந்த அமைப்பினாலும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதென சுட்டிக்காட்டப்படுகிறது. (ஓ-6)

## யாழ்.மாவட்டத்தில் பொலிஸ் ஆட்சேர்ப்பிற்கான நேர்முகத் தேர்வு...














## கல்வி விழிப்புணர்வு ஒன்றியத்தின் பணிகள்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பிரதேசத்தில் கல்வி மேம்பாட்டிற்கான கல்வி விழிப்புணர்வு ஒன்றியத்தால் தற்போதுள்ள சூழ்நிலையில் கல்விக்கான தடைகள் என்ற தொனிப்பொருளில் 'நான் எப்படி படிக்கிறது' என்ற ஓவியம் மூலம் துண்டுப்பிரசுரம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

கல்வி சீர்திருத்தும் பணியில் ஆர்வமுள்ள பலரை இணைத்து புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை ஆர். நேசராசா தலைமையில் பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 5.30 மணிக்கு ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-39)

## இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான 2007/2008 கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென முகாமைத்துவ கற்கைகள் பீட பதில் பீடாதிபதி க. அருள்வேல் அறிவித்துள்ளார். (ஓ-6)

## விண்ணப்ப முடிபுத் திகதி ஒக்ரோபர் 2 வரை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதிக்குரிய விண்ணப்ப முடிபுத் திகதி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக 25.09.2009 ஆம் திகதிய வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதற்கான விண்ப்பமுடிபுத் திகதி 25.09.2009 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் உயர் கல்விக்கான சந்தர்ப்பங்கள் என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12.30 மணிவரை 17 விவசாய சேவைகள் ஒழுங்கை பருத்தித்துறை வீதி நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ம. சின்னத்தம்பி கருத்துரை வழங்கவுள்ளார். தொடர்ந்து இவ்விடயம் பற்றிய கலந்துரை யாடலும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

# கமநெகும திட்டத்தின் கீழ் விதை உழுந்து விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 2008 நவம்பர் மாதம் ஏற்பட்ட நிசா புயல் மற்றும் வெள்ளத்தினால் சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பாதிக்கப்பட்ட சரசாலை, மீசாலை கிழக்கு ,மிருசுவில் வடக்கு, உசன், கொடிகாமம் வடக்கு ,வரணி வடக்கு, அல்லாரை வெள்ளம் போக்கட்டி, மட்டுவில் வடக்கு ஆகிய கிராமங்களில் உள்ள 495 விவசாயிகளுக்கு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு விவசாய போதனாசிரியர் தலைமையில்அவரது அலுவலகத்தில் உள்ளீடுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விவசாயிக்கும் விதை உழுந்து 3 கீலோ, யூரியா 6கிலோ, ரி.எஸ்.பி. 10 கிலோ, எம். ஓ. பி 6 கிலோ ,கிருமி நாசினி 200 மில்லி லீற்றர் மற்றும் சல்பர் 500 கிராம் ஆகியன வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வினை தென்மராட்சி பிரதேச செயலர் யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) ஆகியோர் ஆரம்பித்து வைத்துள்ளனர். விவசாயிகள் அன்றைய தினம் சமூகம் தந்து வித்தை உழுந்தை பெற்றுக்கொள்ளுமாறு விவசாயப் போதனாசிரியர் சு. விஜயகுமார் கேட்டுக்கொள்கிறார். (ஓ-6)

## வைத்தியர்கள் இல்லாததால் நோயாளர்கள் அவதி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மேலும் நான்கு டாக்டர்கள் வரவுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி வி. ஜெயராசா தெரிவித்தார். நீண்ட காலமாக வைத்தியர்கள் பற்றாக்குறை இருந்ததாகவும் வைத்தியர்களின் வருகையையடுத்து நோயாளர்களுக்கு சிறந்த வைத்திய சேவை யை ஆற்ற முடியுமெனவும் தெரிவித்தார். புதிய வைத்தியர்கள் குறிப்பாக இம்மாத இறுதியில் வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் பிற்பகல் வைத்திய சேவை நடைபெற்று வருவதால் நோயாளர்கள் அவதியுறுகின்றனர். அங்குள்ள வைத்திய அதிகாரி வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு காலையில் கடமைக்கு போவதாக குறித்த வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் கரவெட்டி பிரதேச வைத்திய சாலைக்கும் வல்வெட்டித்துறை வைத்திய சாலைக்கும் நிரந்தர வைத்தியர் களை நியமிக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ஓ-10)

## வீதிகள் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகத்தில் உலக உணவுத்திட்ட வேலைத் திட்டத்தின் கீழ் சிரமதானப் பணிகள் மூலமும் வீதிஅபிவிருத்தி சபை ஊழியர்கள் மூலமாகவும் பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக அபிவிருத்தி சபை ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஓ-4-72)

## வீதிப் போக்குவரத்து சம்பந்தமான களப்பயிற்சியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தால் வீதி போக்குவரத்து சம்பந்தமான களப் பயிற்சியும் கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்இன்று செவ்வாய்க்கிழமை கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாலத்திலும் மற்றும் நாளை புதன்கிழமை யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளது. (ஓ-9)

## ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவையால் மாதந்தோறும் வெளிவரும் ஞானச்சுடர் சஞ்சிகையின் புரட்டாதி மாத மலர் வெளிவந்துள்ளது. (ஓ-4)

## குருபூசைத் தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதர் ஆலய அருட்குரு கடையிற்சுவாமிகளின் 118 ஆவது குருபூசைத் தினம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இத்தினத்திலன்று கடையிற்சுவாமிகள் பற்றிய சொற்பொழிவு மற்றும் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## குளங்கள் புனரமைப்பு

(பொன்னாலை)

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி.மேற்கில் இரு குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பொன்னாலை பெரியகுளம், அராலி நாகியைச் சுட்ட குளம் ஆகிய இரு குள்ங்களே இவ்வாறு புனரமைக்கப்பட்டு வருகின்றன.

பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வரும் பொன்னாலை பெரிய குளம் வலி. மேற்கில் மிகப் பெரிய குளம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த குளத்திலிருந்து மாரி காலங்களில் நெற்செய்கைக்கு நீரைப் பெறுவது மாத்திரமன்றி கோடைகாலம் முழுவதும் விவசாயச் செய்கைக்கு விவசாயிகள் நீரைப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-49)


HUDEC | CARITAS

**யாழ்.மீன்பிடி வலை உருவாக்கம்**
**நெவாட் அமையம்,**
**647, கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

வெற்றிடங்கள்: இயந்திர இயக்குநர் – திருத்துநர் (Mechanic Operator)

இயந்திரங்கள் இயக்கக்கூடிய, திருத்தக்கூடிய பின்வரும் தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

- *வயதெல்லை : 23-45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்*
- *கல்வித்தரம்: க.பொ.த (சாதாரணம்)*

தொழில்நுட்ப தகைமை

- *தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் NCT Certificate (Mechanic & Electronic)*
- *மின்சாரம் –மின்னியல் –பொறியியல் சான்றிதழ்கள் (Diploma in Electricity & Electronics)*
- *தொழில்நுட்பம் சார் வேறு தகைமைகள்*
- *குறைந்தது 3 வருட இத்துறையில் அனுபவம்*

மேற்குறிப்பிட்ட தகைமை உடையோர் சுயமாக தயாரிக்கப்பட்ட தங்களது விண்ணப்பங்களை ஐப்பசி 2ஆம் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


இயக்குநர்
கியூடெக் -கரித்தாஸ்
14, மத்தியூஸ் தெரு,
தியோகு வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :–hudec @sltnet.lk

(C-3400)





தேசிய எலைன்ஸ் இன்ஸுரன்ஸின் யாழ்ப்பாண அலுவலகம் நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஏசியன் எலைன்ஸ் இன்ஸுரன்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரமால் ஜெயசிங்க ஆகியோர் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், பிரதம விருந்தினர்கள், ஏசியன் எலைன்ஸ் அதிகாரிகள் ஆகியோர் இணைந்து நாடாவெட்டி அலுவலகத்தைத் திறந்து வைப்பதையும், சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைப்பொதுமுகாமையாளர் சூலா ஹெட்டியாராச்சி மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# விஜய நகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்

12

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

விஜயநகர- நாயக்கர் ஆட்சிக்காலம் தமிழகத்துக் கலை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்திருந்தது. இவர்கள் வைதீக சமயத்தவர்களது கோயிற்கலையை வளர்த்தனர். தங்களின் பெருஞ்செல்வத்தை அதிற் செலவிட்டனர். பழைய கோயில்களைப் புதுப்பித்தனர். விரிவுபடுத்தினர். கோயில்களைக் கோயில் வளாகங்களாக்கினர். கோயில் வளாகங்களை கோயில் நகரங்களாக்கி னர். இம் மன்னர்கள் ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளப் பகுதிகள் ஆகியவற்றை ஆண்டதால் அவர்களது கலைப்பாணி பல்கலைக் கூறுகளையும் உள்ளடக்கிய கூட்டுக் கலைப்பா ணியாக இருந்தது.


விஜயநகரப் பேரரசர்கள் தங்களது அரசின் வடபகுதியில் பிற்காலச் சாளுக்கியர், காகாத்தியர் ,ஹொய்சாளர் ஆகியோரின் கலைக்கூறுகளைப் பின்பற்றினர். தென் பகுதியில் பல்லவர் - சோழர் - பாண்டியர் வளர்த்த மரபினைப் பின்பற்றினர் என கே ஆர். சீனிவாசன் கருதுகின்றார்.

அவர்களது முக்கிய கலைக்கூறுகளாவன, அலங்காரங்களுடன்கூடிய மண்டபங்கள் -அதாவது கல்யாண மண்டபங்கள், ஊஞ்சல் மண்டபங்கள், வசந்த மண்டபங்கள் -வாகன மண்டபங்கள் , ரங்க மண்டபங்கள் . கண்ணாடி மண்டபங்கள்- அமைத்தலும் இம் மண்டபத் தூண்களில் பல கூறுக ளையும் உள்ளடக்கிய அலங்காரங்களைச் செதுக்குதலும் -அதாவது பூவேலைப்பாடுகள், சுருக்குப்பட்டி வேலைகள், சிறு சிறு சிற்பங்கள் அமைத்தல் போன்றவை- அளவெட்டுத் தூண்கள்-தூணில் ஆளுயர சிற்பங்களையோ அல்லது யாளிகளையோ செதுக்குதல் - அமைப்பதும், வாயில்களில் உயரமான பதினொரு தளங்களுக்கும் மேலான, ராய கோபுரங்கள் அமைத்தலும், இன்ன பிறவு மாகும்.

இவர்களுடைய கோயில் விமானங்கள் பிரஸ்தரம் (அல்லது கபோதம் வரை) கருங்கல்லாலும் (அல்லது கடுமையான பாறைக் கல்லாலும்) மேற்பகுதிகள் செங்கல்லாலும் கட்டப்பட்டன. விமானம் மற்றும் கோபுர மேல்த்தளங்களுக்குச் செங்கற்கள் பயன் படுத்தப்பட்டதற்கான காரணங்களில் ஒன்றாக அவர்களது சிற்பக்கலை அமைப்பைக் கூறலாம்.

அதாவது கருங்கல்லில் சிறுசிறு சிற்பங்கள் அமைப்பது கடினமாயிருந்ததால் செங்கல்லைப் பயன்படுத்தி கருவறையின் மேல் தளங்களிலும், கோபுர தளங்களிலும், அளவற்ற சிற்பங்களை உருவாக்கியுள்ளதைக் காணலாம்.

**விஜயநகா நாயக்கர் கால கலைப்படைப்பக்கள்**




அவர் தம் கலைக்கூறுகளில் பல முன்னமே பாண்டியர்களால் துவக்கப் பெற்ற போதிலும் அவை விரிவடைந்து முழுமை பெற்றது இக்காலத்தில்தான்.

அவர்களது தூண்களின் போதிகைகள் இதுகாறும் சற்று மேல்நோக்கி இருந்த நிலையிலிருந்து மாறி கீழ்நோக்கி சற்றுக் கவிழ்ந்த தாமரை மொட்டுப்போல் அமைக்கப்பட்டு அவற்றில் புஷ்ப போதிகையானது.

நாயக்கர்காலத்தில் இப் புஷ்ப போதிகை மேலும் வாழைப் பூ போன்று கீழ்நோக்கித் தொங்கத் துவங்கியது.

விஜயநகரப் பாணியையே நாயக்கர்களும் பின்பற்றியதோடு அவற்றை விரிவும் படுத்தினர். கோயில் முன் மண்டபங்களின் மேற்பகுதியில் கண்ணாடிச் சட்டங்கள் போல் பிரித்து இராமாயண, மகாபாரதக் கதைச் சிற்பத் தொகுதிகளை அமைப்பதும், இவர் தம் கட்டடக் கலைக்கூறுகளில் ஒன்றாகும்.

இவர்களது ஒற்றைக்கல் பெரும் தூண்களில் அடிப்பகுதிகளில் அனைத்தும் இராணுவ வீரர்கள் மற்றும் பிற சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.


பேராசிரியர் கு. சேதுராமன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

தூண்களின் நடுப்பகுதியில் யாளி அல்லது மனித உருவங்கள், கடவுள் உருவங்கள் ஆளுயரத்தில் இருக்கும் என ஏற்கனவே கண்டோம். சில கோயில்களில் பாய்ந்து செல்லும் பெரிய குதிரையும் அதன் மீது வீரனும் அமைக்கப்பட்டிருக்கும். இவ்வகைத்தூண்கள் திருவரங்கம் கோயில் குதிரை மண்டபத்திலும், வேலூரிலும் காஞ்சி வரதராசப் பெருமான் கோவிலிலும் காணப்படுகின்றன. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

135



15 ஆண்டுகளுக்கு முன் பில் கிளின்டன் இதே மசோதாவைக் கொண்டு வந்தபோது அதைத் தோற்கடித்தவர்கள் இவர்கள் தான். டாக்டர்களை அமெரிக்க மக்கள் அதிகம் விரும்புகிறார்கள்.

டாக்டர் பிறவுடி (Dr.BRAUDE) கூறுகிறார்: "ஒபாமாவின் சுகநலத்திட்டம் வெற்றி பெறவில்லையாயின் பழைய நிலை தான் தொடரும். 500 இலட்சம் மக்களுக்கு சுகநல வாய்ப்புகள் மறுக்கப்படும். ஆகவே அவர்கள் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப் பட்டு அழிவார்கள்" என்று.

ஒபாமாவின் சுகநலத் திட்டத்திற்கு எதிர்ச் சக்திகளின் பிரசாரப் பீரங்கிகளாக அனல் கக்கும் இவர்களை ஒபாமாவால் சமாளிக்க முடியுமா?

"ஆம் ! எம்மால் முடியும்" என்பது தான் அவரின் முழக்கம். ஜனநாயகம் வெல்ல வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

ஒபாமா "குழந்தைகளைப் போல அவசியமற்ற வாக்குவாதம் செய்து காலத்தை வீணடித்தது போதும். இப்போது களத்திலிறங்கிச் செயல்படும் தருணம் வந்துவிட்டது" என்று கனல் கக்கும் வார்த்தைகளோடு செப்ரெம்பர் 9 ஆம் திகதி இரண்டு அவைகளையும் சேர்த்து நடந்த காங்கிரஸின் கூட்டுக் கூட்டத்தில் பேசி தொல்லைகளுக்கு உட்பட்டுள்ள அமெரிக்காவின் சுகநலத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயத் தேவையை வலியுறுத்தினார்.

அன்றுதான் மக்கள் அவையினரும் செனட் சபையினரும் நீண்ட விடுதலையை அனுபவித்து விட்டு மீண்டும் ஆட்சிப் பீடத்துக்கு திரும்பியுள்ளனர். இந்த இடைவெளி நாட்களில் சுகநலத் திட்டம் பற்றி ஆதரவாளர்களும் எதிரிகளும் நாடு முழுவதும் கூட்டங்கள் நடத்தினர். அதில் எதிரிகளால் முன் வைக்கப்பட்ட காரணங்களால் அமெரிக்காவின் புதிய சுகாதார சேவை பயங்கரமான பூதாகரமாக சித்தரிக்கப்பட்டு மக்கள் மனங்கள் தடுமாறிப் போயின. இந்தப் பின்னணியில் இக் கூட்டுக்கூட்டம் கூட்டியிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

பெரும்பாலும் இத்தகைய கூட்டத்தை அதிபர்கள் மிக அரிதிலும் அரிதாகத்தான் கூட்டுவது வழக்கம்.

இக்கூட்டத்தில் ஒபாமாவின் பேச்சு மிகவும் சிறப்பாக அமைந்ததென்று நியூயோர்க் ரைம்ஸ் , லண்டன் த எக்கோனோமிஸ்ட் (Newyork Times, The Economist) போன்ற ஊடகங்கள் உட்பட பலர்பரவலாகப் பேசுகிறார்கள்.

ஒபாமா தனது உள்நாட்டு முயற்சியான அவரின் எதிர்கால வெற்றிகளுக்கு அடிப்படையாக அமையப்போகும் சுகநலத் திட்டத்தை தோல்வியில் இருந்து காப்பாற்ற அவருக்குக் கிடைத்த அரிய கடைசிச் சந்தர்ப்பம் இது.

பல கோணங்களில் இருந்து பார்க்கும் போது ஒபாமாவின் அன்றைய பேச்சு மிகவும் சக்தி வாய்ந்ததும் வெற்றியுடையதுமாக அமைந்தது.

முதலாவது அப் பேச்சு மிகவும் உற்சாகம் தருவதாகவும் உணர்ச்சி ததும்புவதாகவும் இருந்தது. அமெரிக்க மக்களை உறக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்குக் கொண்டுவரவும் அவர்களின் சந்தேகங்களையும் பயத்தையும் போக்கும் வகையிலும் அமைந்தது. இது மிகவும் அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகும்.


இதன்மூலம் தான் ஒபாமா தாராளமயக் கொள்கை (Liberal Base) உடையோர்களின் ஆதரவைத் திரட்ட முடியும். நாடு முழுவதும் ஒபாமா நகர சபை மண்டபங்களில் அவர் ஆற்றிய உரைகள் அனைத்தும் பேராசிரியர்களின் விரிவுரைகள் போன்று சட்டாம்பிள்ளைப் போக்கில் அமைந்துவிட்டது எனக் குறைகூறும் " " "Economist" இவ்வாரம் அவர் வயிற்றில் நெருப்போடு வாயால் அனல்கக்கப் பேசினார். அர்த்தமுள்ளதாகக் கேட்டோரைப் பிணிப்பதாக பேச்சு அமைந்திருந்தது என வானளாவப் புகழ்கிறது அதே பத்திரிகை.

ஜம்பொன்

பல வாரங்களாக அவரின் கண்டனக்காரர்கள் நாடு முழுவதும் " ஒபாமாவின் சீர்திருத்தம் " மரணதண்டனை பெறுவோர்களின் வரிசையைத் தான் உருவாக்கப் போகிறதென்று உண்மைக்குப் புறம்பான பல திடுக்கிடும் பொய்த் தகவல்களை கக்கி மக்களின் மனத்தை மாற்றினார்கள். ஆனால் ஒபாமாவின் முயற்சியால் அவர்களின் திசை திரும்பும் செயல் முறியடிக் கப்பட்டு நேரான பாதையில் மக்களை நடாத்திச் செல்ல முடிந்தமை எதிர்ப்பாளர்களை திகைப்புக்குள்ளாக்கி வாயடைத்து நிற்க வைத்துவிட்டது.

(தொடரும்)





வாழ்வகத்தில் இடம்பெற்ற வாணிவிழாவில் வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளைப் படங்களில் காணலாம்.

## மீண்டும் முகாம் மக்களை விடுவிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை ஆரம்பம்

### வவுனியா மாவட்ட செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னித் தடுப்பு முகாம்களில் இருந்து தமது உறவினர்கள்ளப் பொறுப்பெடுக்க விரும்புவர்களின் விண்ணப்பங்களைப் பெறும் நடவடிக்கைகள் வவுனியா மாவட்ட செயலகத்தால் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இடம்பெற்று வந்த இந்த நடவடிக்கை சில நாட்களின் பின்னர் திடீரென இடைநிறுத்தப்பட்டது.

அதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் இப்போது மீண்டும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருவதாக மாவட்ட செயலர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

மீளாய்வு செய்யப்பட்ட, தேவையான விபரங்களை உள்ளடக்கிய வகையில் விண்ணப்பங்கள் தற்போது ஏற்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் கூறினார்.தடுப்பு முகாம்களில் உள்ள மக்களைப் பொறுப்பெடுக்க விரும்பும் உறவினர்கள் தமது விண்ணப்பங்களைக் கையளிக்கலாம் என அரசு அறிவித்திருந்தது.

இதனை அடுத்து கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் இரண்டு நாட்களில் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் 2 ஆயிரம் விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டன.

ஆனால், இந்த விண்ணப்பங்கள் மக்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்டு அரச செயலகங்களில் கையளிக்கப்பட்டமையால் அவற்றில் போதிய விபரங்கள் இருக்க வில்லை என மாவட்ட செயலாளர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

அதனை அடுத்தே விண்ணப்பங்களைப் பெறுவதை இடைநிறுத்தியதாகவும், மீள் குடியமர்வு மற்றும் பேரிடர் நிவாரண அமைச்சிடம் கலந்தாலோசனை நடத்திய பின்னர் தற்போது, நேர்த்தியான, ஒரே மாதிரியான , தேவையான விபரங்கள் அடங்கிய வகையில் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆயிரம் விண்ணப்பங்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன எனவும் அவர் கூறினார். (ஓ-6)

## இடம்பெயர்ந்த தமிழ்மக்கள் வாழ்வது இடைத்தங்கல் முகாம்களிலல்ல முட்கம்பி போடப்பட்ட சிறைக்கூடங்கள்

### மனோகணேசன் எம்.பி

(கொழும்பு)

தமிழ் மக்கள் இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்படவில்லை .மாறாக முட்கம்பி வேலிகள் போடப்பட்ட சிறைக்கூடங்களிலேயே அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். யுத்தம் முடிந்துஅனைத்து மக்களும் சுதந்திரமாக வாழமுடியுமென ஜனாதிபதி தெரிவிக்கின்றார்.

ஆனால் ஏன் தமிழ் மக்களுக்கு இத்தகைய பாரபட்சம் காட்டப்படுகிறது. அவர்கள் இந் நாட்டு பிரஜைகள் இல்லையா என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமாரன மனோ கணசேன் கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஐ.தே.கவின் மக்கள் பேரவை மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைத்துள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. உண்மையில் இவை முகாம்கள் அல்ல. முட்கம்பிகள் போடப்பட்ட சிறைக் கூடங்களே ஆகும்.



கண்ணிவெடிகளை அகற்றிய பின்பே மக்களின் மீள் குடியேற்றம் நடைபெறுமென அரசு கூறுவது முழுப் பொய்யாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தில் எமது படையினர் கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டே புலிகளை முடக்கினர்.

எனவே இன்று மிஞ்சிப் போனால் 10 வீதமாகவே கண்ணிவெடிகள் இருக்கும். எனவே மக்களை மீளக்குடியேற்றாமைக்கு கண்ணிவெடிகள் காரணமல்ல.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. எனவே முகாம்களில் உள்ள 3 இலட்சம் மக்களில் 1 1/2 இலட்சம் பேருக்கு வாக்குரிமை உண்டு.

இந்த வாக்குகளை கொள்ளையடிப்பதற்கே மக்களை அரசாங்கம் பலாத்காரமாக தடுத்து வைத்துள்ளது. (ஓ-6)


ஜினசேன நிறுவனம் தனது சேவையை யாழ்ப்பாணத்தில் விரிவுபடுத்துவதற்காக இல.145 ஸ்ரான்லி வீதியில் விற்பனையும் விற்பனைக்கு பிந்திய சேவையுமான கிளையை இன்று செவ்வாய்க்கிழமை 29.09.2009ல் ஆரம்பிக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

CENTRIC
சென்றிக் நீரிறைக்கும் இயந்திரங்கள்



Robin
விவசாய நீரிறைக்கும் இயந்திரங்களும்,
மின் உற்பத்தியாக்கிகளும்.



Agrimec
விவசாய இயந்திரங்கள்
நீர் சுத்தப்படுத்தும் அலகுகள்
கைத்தொழில் இயந்திரங்கள்



Sinha ®
NEHA
JINASENA DRIP &SPRINKLER Irriqation
தூவல் நீர்ப்பாசன தொகுதிகள்
சொட்டு நீர்ப்பாசன தொகுதிகள்
சூரியக் கல மின் விளக்குகள்



ஜினசேன விற்பனையும், திருத்த சேவையும்.

145 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை முகாமையாளர்
T.P:- 0772366631

(3579)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை

## கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி பதிவு மற்றும் பரீட்சை அலகு அமைந்துள்ள பரமேஸ்வரா ஒழுங்கையிலுள்ள காணியில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் தனிமாடி பரீட்சை மண்டப தொகுதி (கட்டிட பரப்பளவு ஏறத்தாள 700 சதுர மீற்.) க்கான கட்டிட வரைபடங்கள் வரைந்து நல்லூர் பிரதேச சபைக்கு சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று பின்னர் கட்டிட நிர்மாண முடிவில் அமைவுச்சான்றிதழ் பெறுதல் வேலைக்கான கூறுவிலைகள் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் / தனிநபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவற்றுக்கான குடிசார் நிர்மாண விதானிப்பு, கணிய அளவுச்சிட்டை, ஒப்பந்த ஆவணங்கள் என்பன யாழ். பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளர் அவர்களால் மேற்கொள்ளப்படும்.

ஆங்கில மொழியிலான கூறுவிலைப்படிவம் மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 500 (ஐந்நூறு மட்டும்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடமிருந்து 06.10.2009 வரை பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலைப்படிவங்கள் 09.10.2009 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக ***வேலைகள் எந்திரவியலாளர் பராமரிப்புப் பகுதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல 57 யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப் படவேண்டும் அல்லது பராமரிப்புப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

கூறுதாரர் தேவைப்படின் கூறுவிலைப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியில் கட்டணம் ஏதுமின்றி பரீசீலிக்க முடியும் என்பதோடு மேலதிக விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடம் பெற்றுக் கொள்ள முடியும் .

த.பெ.இல.57
யாழ்ப்பாணம்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-3379)

## இன்று ஒரு தகவல்

# பூமியில் சொர்க்கம்

ஒரு பெரியவர் இருந்தார். அவர் தியானம் செய்யும் வழக்கமுடையவர். பெரிய சந்நியாசிகளுடன் தொடர்புகளை கொண்டிருந்தார். அவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். "என்ன சேர்..... உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் சண்டை சச்சரவாகவே இருக்கிறது. எதிர்காலத்தில் மனிதன் நிம்மதியாகவே வாழ முடியாது போல் உள்ளதே" என்றேன்.

அதற்கு அவர் "மனிதன் மனம் வைத்தால் இந்தப் பூமியையே சொர்க்கமாக மாற்ற முடியும்" என்றார்.

ஆர்வமாக அவர் சொல்வதைக் கேட்டேன். அவர் சில விஞ்ஞான உண்மைகளைக் கூறினார். ஒரே மாதிரியான இரண்டு தோட்டங்கள் இருந்ததாம். அவற்றில் ஒரு தோட்டத்தில் அந்த தோட்டக்காரர் அங்கிருந்த செடி கொடிகளை மிகவும் அன்பாகவும் கனிவாகவும் கவனித்துக் கொண்டாராம். அதே தோட்டக்காரர் இன்னொரு தோட்டத்திலுள்ள செடி கொடிகளை மிகவும் வெறுப்பாகவும் எரிச்சலாகவும் கவனித்துக் கொண்டாராம். அன்பாகவும் கனிவாகவும் கவனித்து வந்த செடி கொடிகள் சீக்கிரமாகவும் வலுவாகவும் வளர்கிறதாம். வெறுப்பாக கவனித்து வந்த தோட்டம் அந்த அளவுக்கு வளரவில்லையாம். ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இன்னொரு தோட்டக்காரருக்கு (Prune) செய்வது மட்டும் தான் வேலை. அதாவது, ஒரு பெரிய கத்தரிக்கோலை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு தேவையில்லாத கிளைகளை வெட்டி ஒழுங்குபடுத்தும் வேலை. இந்த தோட்டக்காரர் ஒருநாள் தனது நண்பரைப் பார்ப்பதற்காக மற்றொரு தோட்டத்துக்குச் சென்றார். அவர் அங்கே சென்றவுடன் அங்கே இருந்த சில நுட்பமான செடிகள் ''இவர் தங்களை வெட்டுவதற்காகத்தான் வருகிறார்'' என்பது போல் இலைகளைச் சுருக்கிக் கொள்ள ஆரம்பித்ததாம்.

இதிலிருந்து மனிதனுடைய எண்ண அலைகள் இன்னொரு பொருளையும் பாதிக்கும், பாதிக்கிறது - என்ற ஓர் உண்மை தெரிய வருகிறது. ஒரு தனி மனிதனின் எண்ணம் சொல்-செயல் இந்த பிரபஞ்சத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பது திட்டவட்டமான ஓர் உண்மை.

எல்லோரும் நல்ல எண்ணங்களையே நினைத்தால் உலகில் நன்மைகள் பெருகும். தீமைகள் குறையும்.

சரி...... நல்ல எண்ணம் (Right Thought) என்பது என்ன? இயற் கையின் விதிகளைப் புரிந்து கொண்டு அதை மீறாமல் அதனுடன் ஒத்துப் போகும் எண்ணம் தான் நல்ல எண்ணம். நமது வாழ்க்கை ஒரு சங்கிலித் தொடர் போன்று உணர்வு பூர்வமாக இணைக்கப்பட்டிருக்கிறது.

ஒருவரின் உடலுக்கோ மனதுக்கோ ஏதோ ஒரு அதிர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அது அவருக்கு இரத்த சம்பந்தமுள்ள அல்லது கடமை சம்பந்தமுள்ள மற்றவர்களின் உடம்பிலும் மனதிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இயற்கையின் இந்த விதிமுறையின் படிதான் எண்ண அலைகள் அடுத்தவரைப் பாதிக்கிறது.

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது வெறும் திண்ணைப் பேச்சு இல்லை. அது ஒரு விஞ்ஞான பூர்வமான திட்டவட்டமான உண்மை. இப்படி இவ்வளவு விடயத்தையும் என்னைப் பார்க்க வந்த ஒரு பெரியவர் விபரமாக எடுத்துக் கூறினார்.

அவர் இன்னொன்றும் சொன்னார்.

"இந்த விஞ்ஞான உண்மைகளை எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் குறைந்தது மூன்றாம் வகுப்பிலிருந்தாவது குழந்தைகளுக்குப் போதித்தால் எதிர் காலத்தில் நல்ல விதமான எண்ண அலைகள் இந்தப் பிரபஞ்சத்தில் பரவும். அதன் பிறகு இந்தப் பூமியே சொர்க்கமயமாகும்" என்றார்.

இது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் தான். உலக சமாதானத்திற்காக அணுவாயுதங்களைக் குறைக்க வேண்டும் என்று ஒருபக்கம் முடிவு செய்தாலும் குழந்தைகளை நல்ல விதமாக நாம் வளர்க்க வேண்டும் என்பதும் ஒரு முக்கியமான விடயம். அதை யாரும் மறக்க முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசிரியர்களின் பதவியுயர்வு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கல்வி அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வலயக் கல்வி அலுவலகங்கள் மூலமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆசிரியர்களுக்கு பதவியு யர்வு வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

கடந்த வருடம் தொடக்கம் அமுல் படுத்தப்பட்டு வரும் புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவாக ஆசிரியர்களுக்கு தகைமைகளின் அடிப்படையில் பதவியுயர்வு வழங்கும் வேலைகள் வலயக் கல்வித் திணைக்களங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது ஆசிரியர்களுக்கு சலுகைகளை வழங்கும் வகையில் பதவியுயர்வுக்கு தேவையான சில அடிப்படைத் தேவைகளில் இருந்து விடுவிப்பு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஆசிரியர்களுக்கான பதவியுயர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் தேவையான சலுகைகளை வழங்கி பதவியுயர்வு வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

(ஓ-4)

## அரச தனியார் நிறுவனங்கள்

# தத்தமது பொறுப்பை நிறைவேற்றினால் ஊழல் மோசடிகள் இடம் பெற மாட்டா

## கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பல நிறுவனங்கள் ஊழல் மோசடிகளில் நிரம்பியிருக்கின்றன.

அவ்வாறான நிறுவனங்கள் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றினால் அங்கு ஊழல் மோசடிகள் இடம்பெறாது என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுகின்ற நிறுவனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு முன் மாதிரியாகவும உயர்ந்த நிலையிலும் இருக்கின்றன.

அந்த நிறுவனங்களை போல முன்னேற்றமடைந்து உயர்ந்த நிலையில் இருக்கின்ற பாடசாலைகளும் எல்லோருடைய அவதானத்திலும் இருக்கின்றன.

அரச, தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாது பாடசாலைகளிலும் நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பிலான கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதனாலேயே அவ்வாறான நிறுவனங்கள் பொறுப்பில் உயர்ந்த நிலையில் இருக்கின்றன.

வரவு செலவுத்திட்டத்தின் மூலமாக பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற போதிலும் பாடசாலை அபிவிருததி சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுக்களினால் திரட்டப்படுகின்ற நிதியை செலவழிப்பதில் சில பாடசாலைகள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது.

ஒதுக்கப்படுகின்ற நிதியானது நாட்டிலிருக்கின்ற நிதி ஒழுங்குகளுக்கு அமைவாகவும் கல்வியமைச்சினால் அனுப்பப்படுகின்ற சுற்றறிக்கையின் பிரகாரமுமே செலவிடப்பட்டு அவை கணக்காய்விற்கும் உட்படுத்தப்படல் வேண்டும்.

சில நிறுவனங்களில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன.

எனினும் கல்விப் பிரிவை பொறுத்த மட்டில் அவ்வாறான செய்திகள் வெளியாகாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். கணக்காய்வு தொடர்பில் பாடசாலைகளுக்கு இடையில் இவ்வாண்டு நடத்தப்பட்ட போட்டியில் நாட்டிலுள்ள 327 தேசிய பாடசாலைகளும் பங்குபற்றியமை விசேட அம்சமாகும் என்றார்.

(ஓ-6)

## இராசி பலன்

29.09.2009
(புரட்டாதி 13 செவ்வாய்க்கிழமை)
ஏகாதசி முழுவதும்
திருவோணம் பின்னிரவு 4.42 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
ஸ்மார்த்த ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, பிறர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தொழில் நன்மை. |
| இடபம் | உடல் உழைப்பு, அச்சமான நிலை, புதியதிட்டமிடல், அஜீரணக் கோளாறு. |
| மிதுனம் | வாகன பயம், ஆரோக்கியக் குறைவு, விருந்துபசாரம், வேலைச் சுமை. |
| கடகம் | பணவருவாய், சென்ற இடத்தில் செல்வாக்கு, திடீர் பயணம், உடல் நலம். |
| சிங்கம் | சுகவாழ்வு, தொழில் முன்னேற்றம், நண்பர்கள் சந்திப்பு, தன வருவாய். |
| கன்னி | காரிய இடையூறு, உறவினர் வருகை, தாழ்ந்த சுபாவம், தன விரயம். |
| துலாம் | கல்வியில் ஆர்வம், மாதாசுகம், அற்பர் உறவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | இனிய சம்பவம், கூட்டு முயற்சி, தனவருவாய், அந்நியர் சந்திப்பு. |
| தனுசு | பொருள் விரயம், விவாதம், வேலைச்சுமை, குடும்பக் கவலை. |
| மகரம் | நல்ல முயற்சி, ஜனவசியம், ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை. |
| கும்பம் | பிதா சிந்தை, இடமாற்றம், அதிக பிரயாசை, பெரியோர் வெறுப்பு. |
| மீனம் | தொழில் நன்மை, பெருமையடைதல், கலந்துரையாடல், குடும்ப சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 35 |
| தக்காளி | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 100 |
| கரட் | 80 | 90 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 40 | 50 | 50 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 60 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 35 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 240 | 250 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 40 |

# பிலிப்பைன்ஸை தாக்கிய "கெட்ஸானா" புயல்

## 103 பேர் பலி ; 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்வு

பிலிப்பைன்ஸை தாக்கிய கெட்ஸானா புயல் காரணமாக குறைந்தது 103 பேர் பலியானதுடன் 250,000 பேருக்கும் அதிகமானோர் வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இப்புயலால் தலைநகர் மணிலாவிலும் அருகிலுள்ள மாகாணங்களிலும் மிக மோசமான வெள்ளம் ஏற்பட்டுள்ளது.



பாதுகாப்புப் படையினர் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் கூட்டிணைந்து வெள்ளத்தில் சிக்கியிருந்த 4 ஆயிரம் பேருக்கும் அதிகமானோரை மீட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக பலர் வீட்டுக் கூரைகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

பிலிப்பைன்ஸின் தலைநகரில் 80 சதவீதமான பகுதி நீரில் மூழ்கியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் மணிலாவிலும் ஏனைய 25 மாகாணங்களிலும் அவசரகால நிலையை பிரகடனம் செய்திருந்தது.

ஒரு மாத காலத்திற்குரிய பாரிய மழை வீழ்ச்சி 6 மணி நேரத்தில் இடம்பெற்றதையடுத்தே வரலாறு காணாத வெள்ள பெருக்கு மணிலாவில் அவதானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் றிஸால் மாகாணத்திலுள்ள கெயின்டா நகரில் 100 சதவீதமான பகுதி நீரில் மூழ்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மணிலாவிலுள்ள வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியதால் போக்கு வரத்துகள் தடைப்படிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

புயலையடுத்து சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான நிலையங்கள் மூடப்பட்டதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இடர்பாட்டை எதிர் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இப்புலயலானது தென் சீன கடற் கரைக்கு மேலாக கடந்து செல்கிறது. (ஓ-6)

# பாகிஸ்தானில் நடந்த தற்கொலை தாக்குதலில் ஐவர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள வாசிரிஸ்தான் பகுதியில் மிரான்ஷா என்ற இடத்தில் தலிபான் தீவிரவாதிகள் நேற்று தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள்.

வெடிபொருட்கள் ஏற்றியகார் மூலம் பான்னுநகர் பொலிஸ் சோதனைச் சாவடி மீது தீவிரவாதி மோதினான். இதில் 5 பேர் அதே இடத்தில் பலியானார்கள்.

அவர்களில் தலிபான்களுக்கு எதிராக செயல்படும் மலைவாழ் இன மூத்த தலைவர் மாலிக் அப்துல் ஹகிம் என்பவரும் இறந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

இவர் பாகிஸ்தான் அரசின் ஆதரவாளர் ஆவார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு இங்குள்ள பொலிஸ் நிலையம் மீது நடந்த தற்கொலை தாக்குதலில் 15 பேர் பலியானார்கள். 60 பேர் காயம் அடைந்தனர். (ஓ-6)

# ஐரோப்பிய நாடுகளுக்கு பின்லேடன் எச்சரிக்கை



(நிகோசியா)

ஆப்கானிஸ்தானை விட்டு உடனடியாக தங்களது படைகளை வெளியேற்றும்படி ஐரோப்பிய நாடுகளுக்கு பின்லேடன் எச்சரிக்கை விடுத்துள்ளான்.

அல்கொய்தா தீவிரவாத அமைப் பின் தலைவன் பின்லேடன் 5 நிமிடம் பேசிய வீடியோ பட வடிவிலான ஆடியோ செய்தி ஒன்றை ஜிகாதிகள் என்ற இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

அதில் பின்லேடன் ஐரோப்பிய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்து இருக்கிறான். இந்த ஆடியோ செய்தியை சைட் என்னும் சர்வதேச கண்காணிப்பு புலனாய்வு நிறுவனம் வெளியிட்டு இருக்கிறது.

இந்த செய்தி ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் மொழிகளில் துணைத் தலைப்புகளுடன் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. ஆடியோ செய்தியின் திரையில் பின்லேடனின் புகைப்படம் மட்டும் காணப்படுகிறது. அதில் பின்லேடன் கூறியிருப்பதாவது,

எந்த ஒரு புத்திசாலி மனிதனும் தனது பணத்தை வோஷிங்டனில் கிரிமினல் கூட்டத்தைக் கொண்டு மகன்களுக்காக வீணாக செலவிடமாட்டான். அப்பாவி மக்கள் மீது விமானம் மூலம் குண்டு வீசி கொல்லும் எந்தவொரு தலைமைத் தளபதியின் கீழும் ஒருவர் கூட்டணி வைத்திருப்பது அவருக்கு மிகுந்த அவமானமே ஆகும்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகளுக்கு உதவி செய்து வருவதன் காரணமாகத்தான் லண்டன் மற்றும் மாட்ரிட் நகரங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை ஐரோப்பியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே அமெரிக்காவுடன் கூட்டணி வைத்துள்ள ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஆப்கானிஸ்தானில் இருந்து தங்களது படைகளை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும். நசுக்கப்பட்ட மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அல்கொய்தா தக்க பதிலடி கொடுக்கும். இப்போது ஐரோப்பிய நாடுகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன.

எனவே இனிமேலும், உலக ஏற்றுமதியில் ஐரோப்பிய நாடுகளால் முதலிடத்தில் இருக்க முடியாது. பொருளாதார போரின் காரணமாக அமெரிக்கா கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு ரணமாகி நலிந்து போய்விட்டது.

இந்தநிலையில் ஆப்கானிஸ்தானை விட்டு அமெரிக்க படைகள் வெளியேறினால் உங்கள் கதி என்னவாகும் என்பதை யோசியுங் கள். மேற்கண்டவாறு பின்லேடன் அந்த ஆடியோ செய்தியில் தெரிவித்துள்ளான். (ஓ-6)

## ஜேர்மனியில் பொதுத் தேர்தல்

# அதிபர் அஞ்ஜெலா மெர்கல் மீண்டும் அமோக வெற்றி



ஜேர்மனியின் பொதுத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமானது.

இத்தேர்தலில் அமோக வெற்றி பெற்று இர ண்டாவது தடவையாகவும் பதவி வகிக்கவுள்ளார். ஜேர்மனிய அதிபர் அஞ்ஜெலா மெர்கல் எதிர்த்து போட்டியிட்ட வால்டர் 25 சதவீத வாக்குகளையே பெற்று படு தோல்வியை அடைந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் போர் தொடர்பில் ஜேர்மனிக்கு எச்சரிக்கை விடுக்கும் செய்திகள் பலவற்றை அல்கொய்தா போராளிகள் வெளியிட்டதை கவனத்தில் கொண்டு அந்நாட்டின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அஞ்ஜெலா மெர்கலின் பழைமை வாத கட்சியானது 'லிபரல் பிறீ டெமோகிரட்ஸ்' கட்சியுடன் புதிய கூட்டமைப்பை ஏற்படுத்தி தன்னை வலுப்படுத்திக் கொள்ள எதிர்பார்த் துள்ளது.

இத் தேர்தலில் அஞ்ஜெலா மெர்கலின் பிரதான போட்டியாளராக சமூக ஜனநாயக கட்சியின் தலைவரும் தற்போதைய வெளிநாட்டு அமைச்சருமான பிராங் வோல்டர் விளங்குகிறார். தலைநகர் பெர்லினில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய மெர்கல் தனது கட்சியானது ஜேர்மனியின் பொருளாதார எதிர் காலத்திற்காகப் பாடுபடும் எனத் தெரிவித்தார். (ஓ-6)

# ஈரான் ஏவுகணை சோதனை உலக நாடுகள் அதிர்ச்சி

ஈரானின் அணு ஆயுத உற்பத்திக்கு அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வதுகின்றன. ஆனால் அவற்றை மின் உற்பத்திக்கு தான் பயன் படுத்தி வருகின்றோம். அணு குண்டு தயாரிக்கவில்லை என ஈரான் மறுத்து வருகிறது.



இந் நிலையில் ஈரான் நேற்று முன்தினம் குறைந்த தூரம் சென்று தாக்கக்கூடிய 2 ஏவுகணைகளை வீசி சோதனை நடத்தியது. இச் சோதனை ஈரானில் உள்ள பரேன் பாலைவனத்தில் நடந்தது.

இந்த சோதனையை அந் நாட்டுத் தொலைக் காட்சி நேரடியாக ஒளிபரப்பியது. மேலும் நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணை சோதனை இன்று நடத்தப் படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

மேலும் 2 ஆவது யுரேனியம் செறிவூட்டும் நிலையத்தையும் ஈரான் தொடங்கவுள்ளது. எதிர்ப்புக்களையும் மீறி ஈரான் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது உலக நாடுகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)




# குவைத் சட்ட விரோதமாகக் குடியேறிய 17 ஆயிரம் பேரை நாடுகடத்த உள்ளது

## இதில் ஆயிரம் பேர் இலங்கையர்கள்

குவைத்தில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள 22 நாடுகளைச் சேர்ந்த 17 ஆயிரம் பேரை அந்த நாட்டின் உட்துறை அமைச்சு நாடு கடத்த திட்டமிட்டுள்ளதாக குவைத் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளவர்களுக்கான விமான சீட்டுக்களை நாடு கடத்தல் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய மத்திய முகவர் சமூகம் கொள்வனவு செய்ய விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத் உட்துறை அமைச்சின் அறிக்கையின் படி சுமார் ஆயிரம் இலங்கையர்கள் இவ்வாறு நாடுகடத்தப்படவிருப்பதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சுமார் 4 ஆயிரம் பங்களாதேஷியர்கள், 3500 இந்தியர்களும் நாடு கடத்தப் படவிருப்பதுடன் ஆப்கானிஸ் தான், எகிப்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, பாகிஸ் தான் போன்ற நாடுகளிலிருந்து சட்ட விரோதமாகக் குடியேறியவர்களையும் நாடு கடத்த விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத்தின் வரலாற்றில் மேற்கொள்ளப் படும் பாரிய நாடு கடத்தல் சம்பவம் இது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே கடந்த 2006 ஆம் ஆண்டு 16,000 பேர் நாடு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாடு கடத்தப்படுவதற்கான நடைமுறைகள் அனைத்தும் நிறைவடைந்ததும் அவர்கள் சாதாரண விமானங்கள் ஊடாக குறித்த நாடுகளுக்கு அனுப்பி வைக் கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# சிறுநீரக செயலிழப்பும் அதற்கான சிகிச்சை முறைகளும்

சிறுநீரகங்கள் முழுமையாக பாதிக்கப் பட்ட நோயாளி பெரிட்டோனியல் டயாலிஸிஸ் சிகிச்சையை வீட்டிலேயே தினமும் செய்து கொள்ள அடிவயிற்றுப் பகுதியில் செய்யப் படும் ஏற்பாடு என்ன?

அடிவயிற்றில் தொப்பு ளுக்குச் சற்று கீழே இடது புறம் ஒரு மெல்லிய சாவித்துவாரம் செய்து அதன் வழியே பெரிட்டோனியல் கதீட் டர் குழாய் உள்ளே செலுத்தப்பட்டு பின்னர் அதைச் சுற்றி தையல் போடப்படும். காயம் ஆறியவுடன் அதன் வழியே பெரிட்டோனி யல் சுத்திகரிப்பு கலவை திரவம் உள்ளே செலுத்தப்படும்.

ஒவ்வொரு முறையும் சுமார் 1 அரை லீற்றர் முதல் 2 லீற்றர் திரவம் உள்ளே செலுத் தப்பட்டு சுமார் 4 மணி நேர இடைவெளிக்குப் பின் வெளியே எடுக்கப்படும்.

டயாலிஸிஸ் முறையில் இயற்கையாக அசுத்தங்கள் வடிகட்டப்படுவதால் விற்றமின், புரதச்சத்து இழப்பு மிகவும் குறைவாக இருக்கும்.

மேலும் பெரிட்டோனி யல் டயாலிஸிஸ் செய்து கொள்வோருக்கு உணவு விடயத்திலும் கொஞ்சம் சலுகை கிடைக்கும். அதாவது புரதச்சத்து உணவுகளை கொஞ்சம் அதிகமாகச் சாப் பிடலாம். குடிநீர் விடயத்தி லும் சலுகை கிடைக்கும்.

அதாவது ஹீமோ டயாலிஸிஸ் செய்து கொள் வோர் நாள் ஒன்றுக்கு ஒரு லீற்றர் குடிநீர் தான் குடிக்




கலாம் என்றால், வீட்டிலேயே பெரிட் டோனியல் டயாலி ஸிஸ் செய்து கொள் வோர் நாள் ஒன் றுக்கு 2 லீற்றர் குடி நீர் குடிக்கலாம்.

**சாதக அம்சங்கள்**


ஹீமோ டயாலிஸிஸைக் காட்டிலும் பெரிட் டோனியல் டயாலிஸிஸ் சிறந்தது. ஏனெனில் ஹீமோ டயாலிஸிஸ் முறையில் அசுத்தங் களை செயற்கைச் சவ்வு வடிகட்டுவதால் விற்றமின், புரதச்சத்து இழப்பு அதிகமாக இருக்கும். அதே சமயம், பெரிட்டோனியல்

பெரிட்டோனியல் டயாலிஸிஸ் முறையில் எப்போதும் டயாலிஸிஸ் நடந்து கொண்டி ருப்பதே மேற்சொன்ன சலுகைகள் கிடைக்க முக்கியக் காரணமாகும்.

மேலும் ஹீமோ டயாலிஸிஸ் செய்து கொள்வதைப் போன்று வாரம் மூன்று நாள் மருத்துவமனைக்குச் சென்று பல மணி நேரங்களைத் தாரை வார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

**செலவு அதிகம்**

ஹீமோ டயாலிஸைக் காட்டிலும் பலன் மிகுந்த வீட்டிலேயே செய்து கொள்ளும் பெரிட்




டோனியல் டயாலிஸிஸ்க்கு அதிக செலவா கும் என்பது உண்மை.

ஏனெனில் பெரிட்டோ னியல் டயாலிஸிஸ் முறைக்குத் தேவைப்படும் டயாலிசேட் திரவ மும் குழாயும் வெளிநாட்டிலிருந்து தான் இறக்குமதியாகின்றன.

**பாம்பு கடித்தால்**

நன்றாக செயல்பட்டுக் கொண்டிருந்த சிறுநீரகங்கள், சில சமயங்களில் திடீரென செயலிழக்கலாம். பாம்புக்கடி, வயிற்றுப் போக்கு, கதண்டு என்ற விஷ வண்டுக்கடி, மலேரியா - லெப் டோஸ் பைரோசிஸ் நோய் கள், ஒவ்வாத மாத்திரைகள், பிரசவ காலத் தில் ஏற்படும் அதிக இரத்தப் போக்கு, கருக் கலைப்பு, தற்கொலை முயற்சிக்கு தூக்க மாத்திரையை அதிகம் சாப்பிடுதல் ஆகியவை காரணமாக திடீர் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு.

கட்டு விரியன் பாம்பு கடிக்கும் நிலையில் சிறுநீரில் இரத்தம் வெளியேறும். பாம்புக் கடி, கதண்டு வண்டு கடித்த நோயாளிகளுக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்காவிட்டால் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படும்.


**டாக்டர். பி.சௌந்தர்ராஜன்**
**சென்னை**


இவ்வாறு விஷத் தன்மையால் பாதிப்பு ஏற்படும் நிலையில், உடனடியாக டயாலிஸிஸ் செய்து சிறுநீரகச் செயலிழப்பை தவிர்க்க முடியும். மேலும் டயாலிஸிஸ் சிகிச்சை மூலம் இரத்தத்திலிருந்து பாம்பின் நஞ்சையும் வெளியேற்றி, நோயாளியின் உயிரையும் காப்பாற்ற முடியும். (முற்றும்)

# மன அழுத்தத்தால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து விடுபடுவோம்



மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகளால் அவன் பல விதமான நெருக்கீடுகளுக்கு ஆட்படுகின்றான். இவ்வாறாக உளரீதியான பிரச்சினைகள் சமாளிக்க முடியாத அளவில் நெருக்கீடுகளை ஏற்படுத்துவதன் விளை வாக மனம் பாதிப்படைகிறது, மன அழுத்தம் ஏற்படுகிறது. இவ்வழுத்தம் எல்லை மீறும் போது அதன் விளைவாக நடத்தைப் பிறழ்வுக ளும், உடல் உளரீதியான நோய்களும் ஏற்படுகின்றன.

உலகில் பிரச்சினையில்லாத மனிதர்களே இல்லை எனலாம். அவ்வாறாயின் அனைவ ருக்கும் மன அழுத்தம் ஏற்படுவது இயல்பே. எனினும் இவ்மன அழுத்தத்தை எல்லை மீறாது பார்த்துக் கொண்டோமானால் நாம் எமக்கு ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து தப்பித் துக் கொள்ளலாம்.

**உங்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டிருக்கிறதா?**

மன அழுத்தம் ஏற்பட்டதற்கான அனு பவத்தை, அதன் குறிகுணங்கள் ஏற்பட்டிருப் பதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். பதட்டம், பயம், சோர்வு நிலை, இயலாமை.

**எமது எண்ணத்தில்**

தாழ்வுமனப்பான்மை, மனதை ஒருமுகப் படுத்த முடியாமை, எதிர்காலத்தைப்பற்றிய பயம்,நம்பிக்கையின்மை,இருப்புக்கொள்ளாமை, எதிலும் தோற்கிறோம் என்ற எண்ணம்.

**எமது நடத்தையில்**

மாற்றங்கள், காரணமின்றி அழுதல், உற் சாகமின்மை, உரத்துச் சிரித்தல், கதைக்கும் போது குரல் கம்மியிருத்தல், புகைப்பழக்கம் அதிகரித்தல், மதுப்பழக்கம், போதைப் பாவனை அதிகரித்தல், சாப்பிடாதிருத்தல் அல்லது அதிகம் சாப்பிடல்.

**உடற்றொழிலியல் ரீதியாக**

வியர்வை (பெரும்பாலும் உள்ளங்கை யில்), நெஞ்சு படபடப்பு, தொண்டை நா உலர் தல், அடிக்கடி சிறுநீர் போதல், நித்திரைப் பிரச்சினை, அஜீரணம், வயிற்றோட்டம் போன்ற நிலைமைகள் சில ஏற்படலாம். அல் லது பல காணப்படலாம்.

இவை ஏற்பட்டிருந்தால் நாம் சிறிதளவே னும் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கின் றோம் என்பது தெரியும் எனினும் இவை எல்லை மீறும் போதுதான் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

**மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி?**

மன அழுத்தத்தை குறைப்பதற்கு முதலில் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிக ளிலிருந்து விலகுதல் வேண்டும். விலக முடியாத காரணி எனின் அதற்கு ஏனைய வழிமுறைகளை கையாளலாம்.

♦ **மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகளில் இருந்து விலகுதல்**

சம்பவம் எமக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தின் உ+ம் போர். இங்கு நாம் போர் நடைபெறும் இடத்தில் இருந்து விலகியிருத் தல் நன்று. இதன்போது எமக்கு ஏற்படும் நெருக்கீட்டின் அளவு குறைவதோடு ஏற்படக் கூடிய பாதிப்புக்களும் குறையும்.

♦ **சூழலை நல்ல நிலையில் வைத்தி ருத்தல்**

மனத்திற்கு அமைதி தரக்கூடிய சூழல். சூழல் சுற்றுப்புறம் அமைதியாக இருத்தல். அமைதியான மெல்லிசைகள் கேட்கக் கூடி யதாகவும் நல்ல காற்றோட்ட வசதியுள்ளதாக வும் இருத்தல்.

இருக்கை படுக்கை அறை என்பன தூய் மையாகவும் எளிமையாகவும் இருத்தல். எம்மைச் சார்ந்தவர்களுடனும் சூழ இருப் பவர்களுடனும் நல்ல உறவை பேணுதல். வீட்டு அலுவலக சுவர்களின் வர்ணமும் இளம் நீலம், இளம்பச்சை, வெள்ளை நிறத்தில் இருத்தல் நன்று.

உடைகள் தளர்வான உடைகளாக இருத் தல். இறுக்கமாக இருப்பின் இது கூட மன இறுக்கத்தை அதிகப்படுத்தும்.

♦ **ஆன்மீகத்தில் நாட்டம் கொள்ளல்.**

ஆன்மீகம் என்பது சமய ஆசாரங்களை கடைப்பிடித்தல் என்றில்லை. இன்னா செய் யாமை (நன்மை செய்யாது விடினும் தீமை யாவது செய்யாமை) புறத்தூய்மை, அகத் தூய்மை பேணி பொறாமை, எரிச்சல் உணர் வுகளை உதறி மனத்திருப்தியுடன் வாழல், சற்சங்கம், பஜனை போன்றன நல்ல பல னைத் தரும்.

♦ **மூச்சுப் பயிற்சி, யோகாசனம் உட லைத் தளர்த்தும் பயிற்சி**

இவற்றில் ஈடுபடல். மன அழுத்தம் கூடும் போது மூச்சுப் பயிற்சி (பிரணாயாமம்) மூச்சை ஆழமாக உள்ளெடுத்து வெளிவிடும் போது எமது மனம் தளர்வடைவதை உணரலாம்.

மேலும் இம் மூச்சுப்பயிற்சி யோகாசனப் பயிற்சி என்பன உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒத்திசைவை ஏற்படுத்தி ஆரோக்கியத்தை அளிக்கும் பயிற்சிகளாகும்.

இவற்றை சித்தர்களும் ஞானிகளும் மனித குல மேன்மைக்காக எமக்கு வழங்கியுள் ளார் கள். இவற்றை தகுந்த முறையில் அறிந்து தினசரி பயிற்சி செய்தல் சிறந்த பயனைத் தரும். இதே போன்று உடலைத் தளர்த்தும் பயிற்சிகளும் பலவகையாக கூறப்பட்டுள் ளன. அவையும் சிறந்த பலனைத் தரும்.

♦ **தியானம்**

தியானம் என்பது மனதை அடக்கி ஒடுக்கி செய்வது அல்ல. மனதை ஒருமுகப்படுத்தி செய்வது தியானம் என பலர் தவறாக எண் ணிக் கொள்கின்றனர்.

ஆனால் தியானம் என்பது முடிந் தளவில் மனதை பொறிபுலன் வழி செல்லா வகையில் காற்றோட்டமான அமைதியான இடத்தில் வசதியான அல்லது யோகாசனத்தில் ஏற்ற இருக்கையில் இருந்து மனதில் ஏற்படும் எண்ண அலையை அவதானித்துக் கொண் டேயிருக்க மனம் ஒருமுகப்படும். பல வகை யான தியான முறைகள் உண்டு. இத் தியா னம், யோகாசனம், பிராணாயாமம் என் பவை தகுந்த வழிகாட்டலால் செய்யப்பட வேண்டியவை.

♦ **சிறந்த பொழுது போக்குகள்**

பொழுது போக்குகளை நல்ல முறையில் அமைத்தல் வேண்டும். உ+மாக நல்ல இசைகளை கேட்டல், பூந்தோட்டம் மூலிகைத் தோட்டம் அமைத்தல், குடும்பத்தவர்களுக்கும் ஏனையோருக்கும் உதவுதல் போன்றன வாகும். குறிப்பாக மன அழுத்தத்தைத் தரும் பொருட்கள் சம்பவங்களிலிருந்து விலகிய தாக அமைதல் வேண்டும்.

♦ **கதைத்தல்**

நாம் எமக்கு நம்பிக்கையானவர்களிடம் அல்லது உளவளத் துணையாளர்களிடம் மனம் விட்டு கதைத்தல் வேண்டும். மனம் விட்டு கதைக்கும் போது மன அழுத்தம் பெரு மளவு குறைகின்றது. மனதுள்ளேயே அடக்கி வைக்கப்படும் போது மனஅழுத்தம் அதிகரிக் கின்றது.

அத்துடன் உணர்வுகளை பாதகமில்லாமல் வெளிக்காட்டிக் கொள்ளப்பழகல் வேண்டும்.

*"துயரம் கண்ணீராக வெளிப்படாவிட்டால் அதற்காக மற்ற உறுப்புகள் கண்ணீர் விட நேரிடும்"*

♦ **உளவளத்துணையாளர்கள் அல் லது உளமருத்துவர்கள்**

எம்மால் எம்மை மன அழுத்தத்திலிருந்து அல்லது விளைவுகளிலிருந்து மீட்டுக் கொள்ள முடியாதவிடத்து உளவளத் துணைய்ாளர் கள் அல்லது உள மருத்துவர்களை நாடி எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல் அல் லது குறைத்துக் கொள்ளல் மிக்க பயனுடை யதாக அமையும்.

பிரச்சினைகள் வருவதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் அதனால் ஏற்படும் நெருக்கீடுகள் எம்மை பாதிக்கா வண்ணம் பார்த்துக் கொள்ள முடியும்.

"பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதை தடுக்க முடியாது - ஆனால் பறவைகள் உங்கள் தலைமுடியில் கூடு கட்டாமல் தடுக்கமுடியும்"

*பழமொழி.*


**தி. சுதர்மன்**
**இலவச சித்தாயுர் வேத வைத்தியசாலை**
**உப்புவெளி, திருகோணமலை.**

# புரட்டாதி மாதப் பலன்கள்

## கும்பம்

(அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதங்கள் வரை)

**கொள்கை பிடிப்பை தேவைப்படும் பொழுதும் தளர்த்திக் கொள்ளும் கும்ப ராசி நேயர்களே!**

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, புதிய திருப்பங்கள் பலவும் காணும் விதத்தில் கிரக நிலைகள் உலா வருகின்றன. தொடக்கத்தில் ஏழில் சஞ்சரிக்கும் சனி பிறகு எட்டில் சஞ்சரிக்கப் போகிறார். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். படிப்படியாக முன்னேற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். பக்க பலமாக இருப்பவர்கள் உங்களை விட்டு பிரியாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

குரு வக்ர நிவர்த்திக்குப் பிறகு கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்கு தேவை. விரய ஸ்தானத்தில் உள்ள கிரகம் வக்ர நிவர்த்தியாகி பலம் பெற்றால் விரயங்கள் கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்பு மறுபடியும் உங்களிடமே வந்து சேரலாம். எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது. இக்காலத்தில் நவகிரக வழிபாடு உங்களுக்கு நன்மைகளை வழங்கும்.

செப்டெம்பர் 26 ஆம் திகதி கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் உருவாகிறது. எனவே, வாகன மாற்றம் முதல் வளர்ச்சிக்கு தேவையான மாற்றங்கள் வரை செய்து கொள்வது நல்லது. கோபத்தைக் குறைத்து கொடுக்கல் – வாங்கல்களில் விழிப்புணர்ச்சி காட்டினால் நிம்மதி கிடைக்கும். குடும்ப பிரச்சினைகளில் தேவையானதை மட்டும் கண்டு கொள்வது நல்லது. மற்றவர்கள் விடயத்தில் தலையிடுவதன் மூலம் மன நிம்மதி குறையலாம். கூட்டு முயற்சிக்கு சரியான நபர்களை தேர்ந்தெடுப்பது நல்லது. என்ன இருந்தாலும் சனியின் ஆதிக்கத்தால் வரும் சங்கடங்களை வழிபாட்டால் தான் தீர்த்துக் கொள்ள இயலும்.

அக்டோபர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு உங்கள் கூட்டாளிகளின் பகை மாறும். பிள்ளைகளால் விரயங்கள் உருவாகும்.

அக்டோபர் 7 ஆம் திகதி கடக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அக்டோபர் 8 இல் குரு வக்ர நிவர்த்தியாகிறார். அக்டோபர் 10 இல் சுக்ரன் நீச்சம் பெறுகிறார். எனவே உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு குறையலாம்.

அவர்களுக்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பணம் வந்த மறு நிமிடமே பறந்து போகும். சேமிப்பு கரைவதைக் கண்டு கவலைப்பட மாட்டீர்கள். தாய் வழியில் ஆரோக்கிய பாதிப்புகளும், தந்தை வழியில் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடலாம். விலை உயர்ந்த பொருட்களை விற்கும் சூழ்நிலை உருவாகும்.

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள மாற்று கருத்துடையோர் களைக் கூட அணுகலாமா என்று சிந்திப்பீர்கள். குல தெய்வ வழிபாடு குழப்பத்தை அகற்றும். நீண்ட தூர பயணங்களை விரும்பி ஏற்றுக் கொள்வது அவ்வளவு நல்லதல்ல. நிகழ் காலத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகலாம்.

இம்மாதம் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டால் வாழ்வில் மகிழ்ச்சி கூடும்.

## மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)

**நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நல்லவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் மீன ராசி நேயர்களே!**

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சப்தம ஸ்தானத்திற்கு சனி வரப் போவதால் எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினால் தான் இனிய பலன்களைக் காணலாம். குறிப்பாக, விரயங்கள் கூடும் இந்த நேரத்தில் வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவது நல்லது.

மின்சாதனங்களில் பழுதுகள் உருவாகலாம். பழைய பொருட்களை கொடுத்து விட்டு புதிய பொருட்களை வாங்குவதன் மூலம் பழுதுச் செலவுகளை தவிர்க்க இயலும். முதியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலமும், முக்கிய புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பதன் முலமும் ஒரு சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண இயலும்.

பணத் தேவைகள் பூர்த்தியாகும் என்றாலும் மன நிம்மதி குறையலாம். எனவே, குடும்ப உறுப்பினர்களின் ஜாதகங்களை அலசி ஆராய்ந்து அதற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் நிம்மதியும், நிலையான வருமானமும் கிடைக்கும். குருவும் வக்ர நிவர்த்தியாகிய பிறகு கூடுதல் நற்பலன்களை காணலாம்.

அதுவரை பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. தொழில் சம்பந்தமாகவோ, உத்தியோக சம்பந்தமாகவோ இப்பொழுது எந்த முடிவும் எடுக்க வேண்டாம். சனி வழிபாடு சஞ்சலங்களைத் தீர்க்கும்.

செப்டெம்பர் 26 ஆம் திகதி கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். ஏழாமிடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் எதிலும் கவனத்தோடு செயல்படுவது நல்லது.

வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வருமான பற்றாக்குறை உருவாகும். இடம், பூமி வாங்குவதில் இருந்த சிக்கல்களை இப்பொழுது அகற்றிக் கொள்வீர்கள். பயணங்களால் பலன் கிடைக்குமா என்பது சந்தேகம் தான்.

அக்டோபர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக திருமண முயற்சி கைகூடும். திடீர் பயணங்கள் உருவாகலாம். தெய்வீக சிந்தனை மேலோங்கும். தொழில் பங்குதாரர்களை மாற்றும் எண்ணம் உருவாகும். அந்நிய தேச அனுகூலம் உண்டு.

தனாதிபதி செவ்வாய் அக்டோபர் 7 ஆம் திகதி நீச்சம் பெறுகிறார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடும். வருமானம் எவ்வளவு

**சிவல்புரி சிங்காரம்**

வந்தாலும், போதுமானதாக இருக்காது. மாமன், மைத்துனர் வழியில் மனக்கலக்கம் தரும் செய்தி வந்து சேரலாம். உடன் பிறப்புகளை அனுசரித்து செல்வது நல்லது.

அக்டோபர் 8 ஆம் திகதி குரு வக்ர நிவர்த்தியாகிறார். அக்டோபர் 10 ஆம் திகதி சுக்ரன் நீச்சம் பெறுகிறார். எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். அதன் மூலம் தொழில் வளர்ச்சியைக் காண்பீர்கள். குடும்ப ஒற்றுமை கூடும்.

இம்மாதம் எதிர்பார்ப்புகள் நிறைவேற, மதிப்பும், மரியாதையும் உயர குரு தெட்சணா மூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. குருவை வழிபட்டால் குழப்பங்கள் நீங்கும். குதூகலமான வாழ்க்கை அமையும். (முற்றும்)

# வன்னி தடுப்பு முகாம்களில் 12 வெளிநாட்டவர்கள்; விசாரணைகள் முடிபடைந்த பின்னரே விடுதலை


## இலங்கை அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் தமிழ் மக்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களில் வெளிநாடுகளைச் சேர்ந்த 12 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என இலங்கையின் அரச புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் அனைவரும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மூவர், பிரத்தானியாவைச் சேர்ந்த ஒருவர், ஜேர்மனியைச் சேர்ந்த ஒருவர், டென்மார்க்கைச் சேர்ந்த மூவர், இந்தியர்கள் இருவர், கனடா மற்றும் நோர்வேயைச் சேர்ந்த ஒருவர் ஆகிய



யாழ். கோட்டை முனிஸ்வரன் ஆலய இரதோற்சவத்தில் பக்தர்கள் புடைசூழ சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதைப் படத்தில் காணலாம்

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களே முகாமில் அடைபட்டுக் கிடக்கின்றனர் என அதிகாரிகள் கூறினர்.

இவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக அந்தந்த நாடுகளைச் சேர்ந்த தூதரகங்கள் நாட்டின் வெளிவிவகார அமைச்சுடன் பேச்சுக்களை நடத்தி உள்ளன. தற்போது அந்த விபரங்கள் பாதுகாப்புத்துறை அமைச்சுக்கு நகர்த்தப்பட்டுள்ளன.

சோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்ததும் இந்த வெளிநாட்டவர்கள் விடுவிக்கப் படுவார்கள் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வியன்னா பிரகடனத்தின் அடிப்படையில் தமது நாட்டுக் குடிமக்களை முகாமில் இருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொண்டுள்ளனர் என நோர்வே தூதரக அதிகாரிகள் கூறினர்.

தமது குடிமகனை முகாமில் சென்று பார்வையிடுவதற்கு அரசு தமக்கு அனுமதி மறுத்துள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் இந்த வெளிநாட்டவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் இருந்த தொடர்புகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட பின்னரே அவர்களை விடுவிப்பது தொடர்பாக முடிபு எடுக்கப்படும் என இலங்கை அதிகாரிகள் கூறுகின்றனர்.

பிரித்தானியாவைச் சேர்ந்த தமிழ்வாணி ஞானகுமார் அண்மையில் முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் நாடு திரும்பியதும் இலங்கை அரசின் செயற்பாடுகள் தொடர்பாகவும் முகாம்களின் நிலை குறித்தும் பிரித்தானிய ஊடகங்களில் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். (ஓ-6)

## பரா வெளிச்சக் குண்டுகள் நிட்டம்புவையில் மீட்பு

பராவெளிச்சக் குண்டுகள் இரண்டு நிட்டம்புவ கலக்கெட்டிஹேறன தேசத்திலுள்ள கிணற்றுக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருமான நிமல் மெதிவக்க தெரிவித்தார்.

பாழடைந்த கிணற்றை சுத்தம் செய்து கொண்டிருந்தவர்களே கிணற்றுக்குள் மர்ம மான பொருட்கள் கிடப்பதைக் கண்டு வீட்டு உரிமையாளரின் உதவியுடன் நிட்டம்புவ பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

தகவலறிந்து ஸ்தலத்திற்கு விரைந்து பொலிஸார் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட இரண்டு பராவெளிச்சக் குண்டுகளும் கிணற்றில் ஏன்? மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்பது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் சொன்னார். (ஓ-6)

## 100 கனரக வாகனங்கள் இராணுவத்தினரிடம் கையளிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள வடக்கின் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்துவதற்காக சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 100 கனரக வாகனங்கள் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

2.353 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இந்த கனரக வாகனங்களில் புல்டோசர் இயந்திரங்கள் 22, மோட்டார் கிரேடர் இயந்திரங்கள் 37, ரோலர் இயந்திரங்கள் 09, எஸ்கவேட்டர் இயந்திரங்கள் 14, மற்றும் வீல் லோடர்கள் 19 போன்றனவும் உள்ளடங்குகின்றன.

இவற்றைக் கொண்டு வடக்கின் பிரதான வீதிகள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றன துரிதமாக புனரமைக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

ஊசியைப் பார்த்து சல்லடை சொல்கிறது உன்னுடைய வாலில் ஒரு ஓட்டை இருக்கிறது என்று

- இந்தியா

வலம்புரி

## இலங்கை பற்றிய மதிப்பீட்டிற்கு உதவும் பிரதமர் ஆற்றிய உரை!

நாடுகளின் உள்விவகாரங்களில் ஐ.நா. சபை தலையிடக் கூடாதென இலங்கைப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூறியுள்ளார். ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க,

உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா. சபை தலையிடக் கூடாதென்பதைக் கருப்பொருளாகக் கொண்டு உரை நிகழ்த்தியுள்ளார்.

பிரதமரின் உரை ஐ.நா. சபையில் ஒலித்தமையால் அதற்கான கவனிப்பு முதன்மையானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதேநேரம் பிரதமரின் உரையிலிருந்து பிரதான விடயங்களை நாம் அனுமானிக்க முடிகின்றது. அதிலொன்று இலங்கை அரசு ஐ.நாவின் கடுமையான அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளது.

அதாவது உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா. தலையிடக்கூடாதெனக் குறிப்பிட்ட பிரதமர், மீள்குடியேற்றத்தை வலிந்து வலியுறுத்தக் கூடாதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆக, இதிலிருந்து முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களை மீள்குடியேற்றுமாறு ஐ.நா. சபை இலங்கை அரசுக்கு காத்திரமான அழுத்தத்தை வழங்கி வருவது நிரூபணமாகின்றது.

இதன் வெளிப்பாடாகவே பிரதமரின் உரை ஐ.நாவை சாடும்வகையில் அமைகின்றது.

ஐ.நா. பொதுச் சபையில் ஏறி நின்று ஐ.நாவைக்கண்டிக்கும் மனப்பாங்கு இலங்கையைத்தவிர வேறு எந்த நாட்டவரிடமும் இருக்க மாட்டாது.

ஒருவர் அல்லது ஒரு அமைப்பு பல சிரமங்களை அனுபவித்து கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யும்.

அதற்கு சில விருந்தினர்களையும் அழைத்துக் கொள்ளும். அவ்வாறு அழைக்கப் பட்ட விருந்தினரில் ஒருவர் கூட்டத்தில் குறை கண்டு அதனை தனது உரையில் முன்மொழிவாராயின்,

சபையில் இருப்போர் கூட்ட ஏற்பாட்டாளர்களில் ஒருபோதும் குறைகாண மாட்டார்கள்.

மாறாக உரை நிகழ்த்திய அந்த விருந்தினரிடம் இருக்கக்கூடிய நயத்தக்க நாகரிகம் பேணும் கஞ்சத்தனம், அவரின் உள் ஆதங்கம், சபை அறிந்து பேசமுடியாத தன்மை என்பவற்றையே அறிந்து கொள்வர்.

ஏன் எனில் சபையில் இருப்பவர்கள் கூட்ட ஏற்பாட்டாளர்களின் அழைப்பை ஏற்று வந்தவர்கள்.

அவர்கள் உரை நிகழ்த்திய விருந்தினரின் அழைப்பில் வருகை தரவில்லை.

இந்த உண்மையை மறந்து உரையாற்றுபவர்கள் போல ஐ.நா. சபையில் பிரதமர் உரையாற்றியுள்ளார்.

ஐ.நா. சபையில் இருந்தவர்கள் பிரதமரைப் பற்றி என்ன நினைத்திருப்பார்கள்?

இலங்கையில் தமிழ் மக்களை முகாமில் தடுத்து வைப்பதில் அரசு இன்பம் காண்கின்றது. அதனால்தான் பிரதமர் இப்படி பேசுகிறார் என்று நினைப்பார்கள் அல்லவா?

என்செய்வது? பின்தங்கிய நாடுகள் பொருளாதாரத்தில் மட்டும் பின்தங்கியவை அல்ல. அவை மன நிலையிலும் பின்தங்கியவைதான்.

# முகாம் மாணவர்களுக்கு 130 மில். ரூபா செலவில் கற்றல் உபகரணங்கள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள மாணவர்களில் கல்வி மேம்பாட்டிற்கென அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் நலன்புரி முகாம்களில் இருக்கிற 86 ஆயிரம் மாணவர்களுக்கு சுமார் 130 மில்லியன் ரூபா செலவில் கற்றல் உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அத்துடன் நலன்புரி நிலையங்களில் 70 இலட்சம் ரூபா செலவில் நடமாடும் விஞ்ஞான ஆய்வு கூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

நலன்புரி நிலையங்களிலுள்ள பாடசாலை மாணவர்களுக்காக அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சுமார் 8 இலட்சம் ரூபா பெருமதியான பாடசாலை உபகரணங்களை கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் வைத்து கையளித்து விட்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நலன்புரி நிலையங்களில் இருக்கின்ற கல்விப்பொது தராதர சாதாரண தர மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு எதிர்வரும் மாதங்களில் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன.

வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நலன்புரி முகாம்களில்இருக்கின்ற86 ஆயிரம் மாணவர்களின் தேவைக்காக 130 மில்லியன் ரூபா செலவில் பாடசாலை உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை உபகரணங்கள் மட்டமல்லாது ஆயிரத்து 800 ஆசிரியர்களுக்கு சீருடைகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. நடந்து முடிந்த உயர்தர பரீட்சையில் தோற்றிய 861 மாணவர்களை தயார்படுத்துவதற்காக கொழும்பிலிருந்து சுமார் 16 ஆசிரியர்கள் ஒவ்வொரு நலன்புரி நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

அதேபோல ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் தோற்றிய சுமார் 5 ஆயிரத்து700 மாணவர்களுக்கு தேவையான கருத்தரங்குகள் நடத்தப்பட்டன என்று தெரிவித்தார்.

அத்துடன் வடக்கில் சேதமடைந்த 200 பாடசாலைகளை வடக்கின் வசந்தத்தின் கீழ் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஓ-6)

## சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான கவிதை,கட்டுரைப் போட்டிகள்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வெற்றி பெற்ற தேசத்தில் சிறுவர்களைக் கட்டியெழுப்புவோம் என்னும் கருப்பொருளில் கவிதை, கட்டுரைப்போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

கவிதை,கட்டுரை போட்டிகளின் உள்ளடக்கமாக சிறுவர் உரிமைகள் , அவற்றைப் பாதுகாத்தல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி கவிதை, கட்டுரைப்போட்டிகளில் முதல் 3 இடங்கள் பெறும் மாணவர்களுக்கு வடமராட்சி வடக்கு பிரதேச மட்ட சிறுவர்தின விழாவின் போது சான்றிதழ்களும் , பரிசில்களும் வழங்கப்படும் எனவும் இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 5 ஆம் திகதி எனவும் வடமராட்சி வடக்குபிரதேசசெயலர் இரா. வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-9-19)

## மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கடந்த வருடம் 11 ஆயிரம் மாணவர்கள் இந்த புலமைப் பரிசில்களை பெற்றுக் கொண்டனர்.

இந்தவருடம் இதனை 5 ஆயிரத்தால் உயர்த்த தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்களின் தொகை அதிகரிக்கும் அளவிற்கு புலமைப்பரிசிலை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தற்போது 40 ஆயிரம் மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசிலை பெறுகின்றனர். இதற்காக அரசாங்கம் வருடாந்தம் 85 கோடி ரூபாவை செலவு செய்கிறது.

திறந்த பல்கலைக்கழகம் பௌத்த பாளி பல்கலைக்கழகம் சட்டக் கல்லூரி மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றின் பாடநெறிகளை கற்றுவரும் மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிடும் பெயர் பட்டியல் கிடைக்கப் பெற்றவுடன் இந்த வருடத்திற்கான மகாபொல புலமைப்பரிசிலை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு மாணவருக்காக மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் விசேட திறமைகளை பெற்ற மாணவர்களுக்கு 2 ஆயிரத்து 550 ரூபாவும் கிடைக்கப் பெறுகின்றது. (ஓ-4)

## வீரமாணவர் விருது - 2009

பொதுமக்கள் வீரச் செயல்களுக்கான மன்றம் கல்வியமைச்சுடன் இணைந்து கடந்த ஆண்டு முதல் மாணவர்களுக்கான "வீர மாணவர் விருதினை" வழங்கி வருகின்றது.

அந்த வகையில் தற்போது 'வீர மாணவர் விருது - 2009 க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வீர தீர செயல்களில் ஈடுபட்ட காலம் 1.6.2008 தொடக்கம் 31.07. 2009 வரை என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விண்ணப்பப்படிவங்கள் மாணவர்கள் கற்கும் பாடசாலை அதிபர் மூலம் அல்லது வீர செயல் பற்றி நேரடியாக அறிந்தவர் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நடந்த சம்பவத்தை நிரூபிக்க தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நடுவர் தீர்ப்பே இறுதியானது. ஒரு படிவத்தில் ஒரு மாணவர் மட்டுமே விபரங்களை பூர்த்தியாக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு சுகம்.பி. சந்திரரட்ண தலைவர் பொதுமக்கள் வீரச் செயல்களுக்கான மன்றம், 137ஏ, ஸ்ரீ சித்தார்த்தராமை வீதி, பாணந்துறை எனும் முகவரியுடனோ அல்லது சூரிய பண்டார, துணைப் பதிவாளர், கல்வித்துறை (தொ.பே.இல. 011 2786376) என்பவருடனோ தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளையாகும். (ஓ-6)

## அகிம்சா வாரமும் காந்தி ஜெயந்தி தினமும்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையால் அகிம்சை தினமாகப் பிரகடனம் செய்யப்பட்ட காந்தி பிறந்த தினமான ஒக்டோபர் 2 ஆம் இறுதி நாளாகக் கொண்டு செப்ரெம்பர் 28 இல் இருந்து அகிம்சா வாரம் அனுஷ்டிப்பதற்கும் கல்விக் கூடங்களில் இதற்கான நிகழ்வுகளை நடத்த ஊக்கம் அளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறுதி நாளான ஒக்டோபர் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவித்தலும், 10 மணிக்கு யாழ். மேயர் தலைமையில் பழைய பூங்கா வீதியோரத்தில் மரக் கன்றுகள் நடுதலும் இடம்பெறும்.

பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறும். அங்கத்தவர்கள் அபிமானிகள் கலந்து சிறப்பிக்குமாறு அகில இலங்கை காந்தி சேவா சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ-6)


## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் மனதின் ஆற்றல்கள்



உலகில் தோன்றிய மாபெரும் தீர்க்கதரிசிகளும் மகான்களும் ஞானிகளும் அனைவரும் என்ன செய்திருக்கிறார்கள்? அவர்கள் தங்களுடைய ஒரே ஆயுட்காலத்திலேயே மனித வர்க்கத்தின் முழு வாழ்க்கையும், வாழ்ந்து சாதாரண மக்கள் கூட்டம் பரிபூரண நிலையைப் பெற எடுத்துக் கொள்ளும் கால அளவு முழுவதையும் கடந்து விடுகிறார்கள்.

ஒரே வாழ்க்கையில் அவர்கள் தங்களைப் பரிபூரணப்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். வேறு எதைப்பற்றிய சிந்தனையும் அவர்களுக்கு இருப்பதில்லை. ஒருபோதும் வேறு எந்த விதமான கருத்துக்காகவும் ஒரு கணமும் அவர்கள் வாழவில்லை. இதனால் அவர்கள் அடைய வேண்டிய பாதை அவர்களுக்குக் குறுகியதாகி விடுகிறது. உள்ளத்தை ஒருமுகப்படுத்துவது என்பது இதுதான்.

# ராகுல் காந்திக்கு தொடர்ந்தும் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக எச்சரிக்கை



இந்தியக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செலயலாளர் ராகுல் காந்திக்கு எஞ்சியுள்ள விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களால் அதிக அளவிலான அச்சுறுத்தல் இருப்பதாக இந்திய புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

ஒருபக்கத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் முழுமையாக தோற்கடிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டு வந்தாலும் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி மற்றும் அவரது மகன் ராகுல் காந்தி ஆகியோருக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய சட்டமுறைகளின் கீழ் ராகுல் காந்திக்கு அவரது தாயார் சோனியாகாந்தி மற்றும் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அடுத்தபடியாக அதிக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக அவருக்கு விசேட பயிற்றப்பட்ட பாதுகாப்புக் குழு ஒன்றும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே அண்மையில் தமிழகத்திற்கான விஜயம் மேற்கொண்டிருந்த ராகுல் காந்தி நீண்ட தூரப் பாதைப் பயணங்களை மேற்கொள்வதை அரை மனத்துடன் தவிர்த்துள்ளார்.

இதேவேளை ராகுல் மற்றும் அவரது தாய்க்கும் ஜெயிஸ் ஈ மொகமட் போன்ற பாகிஸ்தானின் இயங்கும் தீவிரவாத அமைப்பின் அச்சுறுத்தலும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்ட ஜெய்ஸ் ஈ மொகமட் அமைப்பின் உறுப்பினர்கள் மூவரிடம் தனித்தனியே மேற்கொண்ட விசாரணைகளில் ராகுல் காந்தி அவர்களின் முதன்மை இலக்காகக் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.


ராகுல் காந்தி தமிழகத்திற்கான தொடர்ந்தும் விஜயம் செய்யும்போது அவருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழகப் பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும் இணைந்து செயற்படவுள்ளனர். (ஓ-6)

# பூச்சிகளை உண்ணும் அதிசயச் செடி

(கொடைக்கானல்)

பூச்சிகள் செடிகளை உண்ணப் பார்த்திருக்கின்றோம். ஆனால் பூச்சிகளை உண்ணும் அதிசய செடி ஒன்று கொடைக்கானலில் உள்ளது. கொடைக்கானல் குளிர் சார்ந்த பகுதியாக இருப்பதால் பல்வேறு உயிரினங்களுக்கு இங்குள்ள தாவரங்களே நல்ல உணவாக இருந்து வருகிறது.

இங்குள்ள டொசேரா என்ற தாவரம் உயிரினத்தை உண்டு வாழ்கிறது. இந்த செடியில் இதழ்களுக்குப் பதிலாக வெள்ளை நிறத்தில் முள் வடிவில் காம்புகள் இருக்கும். மனித உறுப்புக்கள் அதன் மீது பட்டாலே சதையைப் பிடித்துக் கொள்ளும். இதன் அருகில் பறந்து வரும் பூச்சிகள் தப்பிக்க முடியாது. ஒரு அடி நீளத்தில் இருக்கும் இந்த அதியச்செடி கொடைக்கானலுக்கு அவசியமான தாவரம் ஆகும். இங்குள்ள மக்களுக்கு பெரும் தொந்தரவாக இருக்கும் செல்பூச்சிகளை ஒழிக்க வழியின்றி தவித்த மக்களுக்கு தற்போது "டொசேரா" செடி தான் கைகொடுக்கிறது. இந்த செடிகளுக்கான கிராக்கியை தொடர்ந்து பண்ணைகளில் இவற்றை வளர்க்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. (ஓ-6)




# மீனவர்களின் வேலைநிறுத்த போராட்டம் கைவிடப்பட்டது

இராமேஸ்வர மீனவர்கள் நடத்தி வந்த காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மீனவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்து மத்திய அரசிடம் பேச்சுவார்த்தை நடத்துவதாக தமிழக அரசு உறுதியளித்ததைத் தொடர்ந்தே இப் போராட்டம் நேற்று முன்தினம் கைவிடப்பட்டுள்ளது.

கடற்படையினரால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 21 மீனவர்களை விடுதலை செய்யக் கோரியும், கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்க உரிமை வழங்கக்கோரியும் நடத்தப்பட்ட இப் போராட்டம் குறித்த மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து எதிர்வரும் அக்டோபர் 2 ஆம் திகதி கடலுக்குச் செல்ல மீனவர்கள் முடிவு செய்துள்ளனர். (ஓ-6)

ம.பி., மாநிலம் போபாலில் மகா நவமியையொட்டி, பக்தர் ஒருவர் நாக்கில் சூடம் ஏற்றி நேர்த்தி கடனை நிவர்த்தி செய்தார்.



## மாநில, மத்திய அரசுகள்

# இந்திய மீனவர்கள் மீது காட்டும் அக்கறையை இலங்கை மக்கள் மீதும் காட்ட வேண்டும்

## ஆய்வாளர்கள் கருத்து

இலங்கைக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டு நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் ஹிந்து தெரிவித்துள்ளது. 21 மீனவர்களும் அவர்களின் 5 படகுகளும் இவ்வாறு விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீனவர்கள் கடந்த 17 ஆம்திகதி தனுஷ்கோடி மற்றும் தலைமன்னார் பிரதேசங்களுக்கு இடையிலான கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு அனுராதபுரம் சிறையில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.




எனினும் தமிழகத்தில் இடம்பெற்ற மீனவர்களின் பணிப் பகிஷ்கரிப்பினைத் தொடர்ந்து தமிழக அரசாங்கத்தின் அழுத்தத்தினால் இந்த மீனவர்கள் மீண்டும் ஒக்டோபர் முதலாம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட இருந்த அவர்கள் அதற்கு முன்னரே மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தற்போது தமிழகம் சென்றடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தமிழக மீனவர்கள் தொடர்பில் தமிழக அரசும் இந்திய அரசும் மேற்கொண்டு வரும் இவ்வாறான அழுத்தங்கள் இலங்கையில் முகாம்களில் வாடும் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பிலும் பிரயோகிக்கப்படுமாக இருந்தால் அவர்கள் விரைவிலேயே சொந்த இடங்களில் மீள்குடியமரும் வாய்ப்பு ஏற்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-6)

# துண்டிக்கப்பட்ட கையை பொருத்திய டாக்டர்கள்

(ஜெய்ப்பூர்)

அரியானா மாநிலம் மகேந்திரகாரைச் சேர்ந்த 3 வயதுச் சிறுவன் ராகேஷ், கோதுமை அரைக்கும் எந்திரத்தில் ராகேஷ் கையை விட்டுவிட்டான்.

இதில் அவனது வலது கை முழங்கையிலிருந்து துண்டிக்கப்பட்டது.


உடனே சிறுவனையும் துண்டித்த கையையும் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள எஸ்.எம்.எஸ்.மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு டாக்டர்கள் சிறுவனின் துண்டித்த கையை மறுபடியும், பொருத்த சத்திரசிகிச்சை செய்தனர்.

பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் பிரதீப் கோயல் தலைமையிலான குழுவினர் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர். நரம்புகள், எலும்புகள் இணைக்கப்பட்டு வெற்றிகரமாக சத்திரசிகிச்சை முடிந்தது. அவனது கை ஒரு வருடத்துக்குள் முழுமை யான செயற்பாட்டுக்குள் வந்துவிடும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

# காதலியை சந்திக்க ஏற்பாடு செய்யக்கோரி தென்னையில் ஏறி போராட்டம் நடத்திய கைதி

## கேரளாவில் சம்பவம்



(கோழிக்கோடு)

காதலியைப் பார்க்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சிறைக் கைதி ஒருவர் தென்னை மரத்தில் ஏறி ஐந்தரை மணி நேரம் போராட்டம் நடத்திய விநோத சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கேரள மாநிலம் கோழிக்காடு பிரதேசத்தை அடுத்த கொடுவள்ளிப் புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஷிபு (வயது 23) என்பவரே இவ்வாறு விநோத போராட்டத்தில் ஈடுபட்டவராவார்.

தனியார் பஸ் தொழிலாளியான ஷிபு. பிளஸ் 1 பள்ளி மாணவி ஒருவரைக் கடத்தி ஒரு மாதத்திற்கும் மேலாக தலைமறைவாக வைத்திருந்த வழக்கில், கைது செய்யபட்டு நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார். இவர் சிறையில் அடைக்கப்பட்டது முதல், தனது காதலியைக் காணவேண்டும். அவளைச் சந்திக்க பொலிஸார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறி அடம்பிடித்து வந்தார்.

இந்நிலையில், சிறையில் உணவுக்காக வரிசையில் காத்துக்கொண்டிருந்த ஷிபு திடீரென, வயிறு வலிக்கிறது. கழிவறைக்குச் சென்று வருகிறேன் என்று ஓடி, அங்கிருந்த 55 அடி உயர முள்ள தென்னை மரத்தில் விறுவிறுவென ஏறி மரத்தின் உச்சிக்குப் போனார். அதை அறிந்த பொலிஸார் அங்கு விரைந்து சென்று, அவரைக் கீழே இறங்குமாறு கூறினர்.

ஆனால், தனது காதலியை சந்திக்க ஏற்பாடு செய்யும் வரை நான் கீழே இறங்கமாட்டேன் என்று கூறி, மரத்திலேயே அமர்ந்து போராட்டத்தை ஆரம்பித்தார். இதை அடுத்து, அங்கு வந்த பீச் பகுதி தீயணைப்புப் படையினர், தென்னை மரத்தில் ஏறி அவரைக் கீழே இறக்க முயற்சித்தனர். அப்போது மரத்தின் மீதிருந்த ஷிபு தேங்காய்களை அவர்கள் மீது எறிந்து தாக்கினான். இதனால் முயற்சியை கைவிட்ட படையினர் தரையில் வலைவிரித்து ஷிபுவை தள்ளிவிடுவதன் மூலம் பிடிக்க முற்சித்தனர். எனினும் அது பயனளிக்கவில்லை.

பின்பு தகவலறிந்த சம்பவ இடத்திற்கு வந்த ஷிபுவின் தாய் மகனுக்கு பல அறிவுரைகளை கூறினார். எனினும் ஷிபு அவற்றை ஏற்க மறுத்ததைத் தொடர்நது வேறு வழியில்லாமல் அவனது காதலியை சந்திக்க ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தார். தாயின் உறுதி மொழியை ஏற்ற மகன், ஐந்தரை மணிநேர போராட்டத்தை கைவிட்டு தென்னை மரத்தில் இருந்து கீழே இறங்கினார். அவரை உடனடியாக பிடித்த பொலிஸார் கோழிக்கோடு பீச் அரசு மருத்துவமனைக்கு உடல் நலப் பரிசோதனைக்காக கொண்டு சென்றனர். (6)

ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடர்

# இங்கிலாந்து அணி அரையிறுதியில்; தென்னாபிரிக்கா போராடித் தோல்வி

(சென்சூரியன்)

ஷா-கொலின்வூட் ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

8 அணிகள் மோதும் ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் சென்சூரியனில் நடைபெற்ற லீக் சுற்றின் 8-வது போட்டியில் பிரிவு பி யைச் சேர்ந்த இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப ஜோடி ஸ்ரொரஸ் - டென்லி சுமாரான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் டென்லி 21 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ஸ்ரொரஸ் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 12.1 ஓவர்களில் 59 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ஷா-கொலின்வூட் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இங்கிலாந்து அணி 21.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் ஓ வைஸ்ஷா 63 பந்துகளிலும் கொலின்வூட் 56 பந்துகளிலும் அரைச் சதத்தைக் கடக்க இங்கிலாந்து 29.2 ஓவர்களில் 150 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடியைப் பிரிக்க தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்காமல் போக இங்கிலாந்து அணி 34.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் ஓவைஸ்ஷா 89 பந்துகளில் (5 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 98 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பையிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய மோர்கன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் கொலின்வூட் 94 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 82 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 43.1 ஓவர்களில் 262 ஓட்டங்களை எடுத்து 4-வது விக்கெட்டையிழந்தது. அடுத்துக் களமிறங்கிய ரைட் 8 ஓட்டங்களுடனும் பொப்ரா ஒரு ஓட்டத்துடனும் பிரோட் பூச்சியத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.




எனினும் மறுமுனையில் மோர்கன் வாண வேடிக்கை காட்டி ஓட்டமழை பொழிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 323 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மோர்கன் 34 பந்துகளில் (4 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 67 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் பார்னல் 3 விக்கெட்டுக்களையும் போத்தா 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரைன், கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு சிமித்-கிப்ஸ் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர். எனினும் கிப்ஸ் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கலிஸ் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து களமிறங்கிய டி வில்லியர்ஸ் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய சிமித் 54 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இதில் ஏ.பி.டி.வில்லியர்ஸ் 41 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய டுமினி 24 ஓட்டங்களுடனும் பௌச்சர் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

எனினும் மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சிமித் 104 பந்துகளில் தனது 9-வது ஒருநாள் போட்டிச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் அல்பி மோர்கல் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 44 .1 ஓவர்களில் 255 ஓட்டங்களை எடுத்து 6-வது விக்கெட்டையிழந்தது. தொடர்ந்து களமிறங்கிய வான் டேர்மேர்வ் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து பார்னல் களமிறங்க மறுமுனையில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய அணித் தலைவர் சிமித் 134 பந்துகளில் (10 பவுண்டரிகள் அடங்கலாக) 141 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணியினர் நிம்மதி அடைந்தனர்.

இதில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 301 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பார்னல் 10 ஓட்டங்களையும் ஸ்ரையன் 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்து வீச்சில் அன்டர்சன், பிரோட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் கொலின்வூட், சுவான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் 2 புள்ளிகளைப் பெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 4 புள்ளிகளுடன் முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இப் போட்டியில் தோல்வியடைந்த தென்னாபிரிக்க அணி இலங்கை அணியுடன் இணைந்து நாளை நடைபெறும் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியை காத்திருக்க வேண்டிய நிலையுள்ளது.

இதில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றால் இலங்கை, தென்னாபிரிக்க மற்றும் நியூசிலாந்து அணிகளில் ஒன்று, ஓட்ட வீத சராசரியின் அடிப்படையில் அரையிறுதிக்கு முன்னேறும். இப் போட்டியில் ஆட்ட நாயகனாக ஓ வைஸ்ஷா தெரிவானார்.

## ஐ.சி.சி. சம்பியன்ஸ் தொடர் அணிகளின் புள்ளிகள் பட்டியல்

பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | சராசரி ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 02 | 02 | 0 | 0 | 04 | +1.606 |
| அவுஸ்திரேலியா | 02 | 01 | 0 | 0 | 03 | +1.000 |
| இந்தியா | 02 | 0 | 01 | 0 | 01 | -1.080 |
| மேற்கிந்தியத்தீவுகள் | 02 | 0 | 02 | 0 | 0 | -1.501 |

பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | சராசரி ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| இங்கிலாந்து | 02 | 02 | 0 | 0 | 04 | +0.512 |
| இலங்கை | 03 | 01 | 02 | 0 | 02 | -0.085 |
| நியூசிலாந்த | 02 | 01 | 01 | 0 | 02 | -0.129 |
| தென்னாபிரிக்கா | 03 | 01 | 02 | 0 | 02 | -0.177 |

குறிப்பு :- நேற்று நடைபெற்ற இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி வரையான புள்ளிப் பட்டியல்

## ஆஸி.-இந்தியா மோதல் மழையால் கைவிடப்பட்டது

### பாகிஸ்தான் அரையிறுதிக்குத் தகுதி

(சென்சூரியன்)

அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான நேற்றைய போட்டி மழை காரணமாக இடை நடுவில் கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்பட் டுள்ளது. இதன் மூலம் பிரிவு ஏ யில் பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் எட்டு அணிகள் மோதும் ஐ.சி.சி.சம்பியன்ஸ் தொடரில் நேற்று நடந்த லீக் சுற்றின் 9 ஆவது போட்டியில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் மோதின.


இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 42.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 234 ஓட்டங்க ளை எடுத்த போது மழை குறுக்கீடு செய்தது.

தொடர்ந்து இடைவிடாத மழைகாரணமாக நேற்றைய போட்டி முடிபின்றி கைவிடப்பட்டு அவுஸ்திரேலிய- இந்திய அணிகளுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டது.

இதன் மூலம் பிரிவு ஏ யில் ஏற்கனவே இரு போட்டிகளில் வெற்றியீட்டி 4 புள்ளிகளைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதனால் மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி பெற்றிருந்த 2 புள்ளிகளுடன் நேற்றைய ஒரு புள்ளியுமாக மொத்தம் 3 புள்ளிகளுடன் பிரிவு ஏ யில் இரண்டாமிடத்திலுள்ளது.

எனவே அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணியை வெற்றிகொண்டால் அரையிறுதிக்கு தகுதி பெறும். இந்திய அணி அரையிறுதி வாய்ப்பைப் பெறவேண்டுமானால் மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் சிறப்பான வெற்றியைப் பெறும் அதேவேளை பாகிஸ்தான் அணியிடமும் அவுஸ்திரேலிய அணி தோல்வியடைய வேண்டும்.



யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கம் நடத்திய மாவட்ட மட்டத்திலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் பிரகாசித்த யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி, ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வின் போது...

# இருமொழி கொள்கைகளை நடைமுறைபடுத்துவதில் சிக்கல்

## அமைச்சர் குணசேகர குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்களம் மற்றும் தமிழ் இரு மொழிகளையும் அலுவலக மொழியாக நடை முறைப்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக அமைச்சர் டி.ஈ.டபிள்யூ.குண சேகர தெரிவித்தார். பொது நிர்வாக சேவையில் உள்ள 3 இலட்சம் அதிகாரிகள் இரண்டாவது மொழியில் தேர்ச்சி பெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சர் குணசேகர, மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத் துவதற்கு இது பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாக கூறி னார்.

அரச படைகளை தவிர்த்து, நாட்டின் பொது நிர்வாக சேவையில் பணியாற்றும் அதிகாரிகளில் மத்திய அரசைச் சேர்ந்த 6 வீதத்தினரும் மாகாண அரசுகளைச் சேர்ந்த 13 வீதத்தினரும் மட்டுமே இரண்டாவது மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டுமாயின் பொது நிர்வாக சேவையில் உள்ள அதிகாரிகள் இரண்டாவது மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டியது அவசியம்.

இந்த நிலையை அடுத்து பொது நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு இரண்டாவது மொழியைக் கற்பிப்பதற்கு விரைவான நட வடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதர்க அமைச்சர் கூறி னார்.

இரண்டாவது மொழியைக் கற்றுக் கொள்பவர்களுக்கு ஊக்கத் தொகை சம்பள உயர்வுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. புதிதாக இடம்பெறும் ஆட்சேர்ப்புக்களில் இரண்டாவது மொழி தெரிந்திருப்பது அவசியம் என்ற விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது.

அரச நிறுவ னங்களில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு இரண்டாவது மொழியைக் கற்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## இலங்கை நீதித்துறையில் சர்வதேச வலைப்பின்னல்

(கொழும்பு)

அரசின் காவலில் இருக்கும் விடுதலைப் புலி சந்தேக நபர்களை வழக்கமான விசாரணை முறைகளுக்கு மாறாக சிறப்பு நீதி நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கு நீதித்துறை முயற்சிகளை எடுத்து வருகின்றது இதற்காக அனைத்துலக நீதி வலைப் பின்னல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளில் அது ஈடுபட் டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நாட்டின் தலைமை நீதியரசர் அசோக டி சில்வாவும் நீதித்துறை அமைச்சர் மிலிந்த மொறகொடவும் ஹெலண்ட் நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். (ச-5)

# இரண்டாவது பொலிஸ் நிலையம் வன்னியில் திறந்துவைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றிய வன்னிப் பகுதியில் அரசின் இரண்டாவது பொலிஸ் நிலையம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை திறந்து வைக்கப் பட்டது. பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ன ஏ-9 நெடுஞ்சாலை ஓரமாக கனகராயன் குளத்தில் இந்த பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்தார்.

கனகராயன்குளம் 5 கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒரு பிரதேச செயலகத்தையும் உள்ளடக்கிய பகுதி. மாங்குளத்திற்கான பொலிஸ் கண்காணிப்பாளர் அலுவலகமும் தற்காலிகமாக நேற்று முன்தினம் கனகராயன்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது.

புலிகளிடம் இருந்து வன்னிப்பகுதி படையினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் புளியங்குளத்தில் முதலாவது பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டது. அதன் பின்னர் இப் போது இரண்டாவது நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுக்கு ஏற்ப படிப்படியாக ஏனைய பொலிஸ் நிலையங்களும் பொலிஸ் சோதனை நிலையங்களும் அமைக்கப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர்கள் காமினி நவரத்ன, நிமால் லெவ்கே, ரவி விஜயகுணவர்த்தன மற்றும் தரைப்படை பிரிகேடியர் நபகொட மற்றும் படைகளின் அதிகாரிகள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச-5)

# யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை சர்வதேச தரத்துக்கு உயர்த்த இந்தியா உதவி

(கொழும்பு)

போர் முடிபடைந்துள்ளதைத் தொடர்ந்து இலங்கையின் வடபகுதியில் புனரமைப்புப் பணிகளுக்கு உதவிகளை வழங்க இந்தியா தயாராகி உள்ளது ஏற்கனவே 500 கோடி இந்திய ரூபாவை இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கு என புதுடில்லி ஒதுக்கி இருந்தது. அதில் என்னென்ன பணிகளை மேற்கொள்வது என்பது தற்போது அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் இந்த உதவிகள் விரைவாக வழங்கப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன. வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கவென 2 ஆயிரத்து 600 தொன் கூரைத் தகடுகளை இந்தியா ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது.

இன்னும் 2 ஆயிரத்து 600 தொன் கூரைத் தகடுகள் விரைவில் அனுப்பிவைக்கப்பட உள்ளன. போரின் போது கூரைகள் சேதமான வீடுகளுக்கு அவற்றை மீளப்பொருத்த இவை பயன்படுத்தப்படும்.

வடக்கில் விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக இந்திய விவசாய ஆராய்ச்சியாளர் கள் குழு ஒன்று வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

பஸ்கள், பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், விவசாய உபகரணங்கள் என்பவற்றையும் இந்தியா வழங்கி உள்ளது. அத்துடன் வடக்கில் போரால் சேதமடைந்த கல்லூரிகளையும், சேதமடைந்த யாழ். பண்பாட்டு நிலையத்தையும் புனரமைப்பதற்கான முன்மொழிவுகளையும் இந்தியா வழங்கி உள்ளது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கம் இந்தியாவின் உதவியுடன் சர்வதேச தரம் வாய்ந்த விளையாட்டு மைதானமாக மாற்றப்படும். வன்னிப் பகுதியில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் மேலும் பல குழுக்களை அனுப்பவும் இந்தியா திட்டமிட்டுள்ளது. (ச-5)

## நலன்புரிமுகாம்களிலுள்ள மக்களுக்கு...

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் ஜெனீவாவில் நேற்று நடைபெற்றது

இதில் உரை யாற்றிய அமைச்சர் சமர சிங்க தெரிவித்துள்ளதாவது;

இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கி உள்ள முகாம்களில் மக்களுடன் மக்களாக பயிற்சி பெற்ற-முன்னர் படையினருக்கு எதிராகச் செயற்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். இவர்களால் அவர் கள் கலந்து வாழும் மக்களுக்கு மட்டும் ஆபத்தில்லை. இவர்களை விடுவித்தால் அது நாட்டில் உள்ள மக்கள் மத்தியில் குழப்பமும் உறுதியற்ற நிலையும் ஏற்படக் காரணமாகிவிடும்.

இடம் பெயர்ந்த மக்களை விடுவிப்பது மற்றும் அவர்களுக்கு முழுமையான நடமாட்ட சுதந்திரத்தை வழங்குவது என்பன தொடர்பில் இந்தக்காரணங்களாலேயே நாங்கள் மிகவும் கவனமாக இருக்கின்றோம்.

இடம் பெயர்ந்த மக்களுக்கு மட்டுமல்லாது நாட்டில் உள்ள மக்கள் அனைவரினதும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவது அரசின் பொறுப்பு.

இடம் பெயர்ந்த சாதாரண தமிழ் மக்கள் போன்று தம்மை மறைத்து வாழும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுவிப்பது நாட்டின் ஏனைய மக்களின் நடமாட்டச் சுதந்திரத்தைப் பெரும் ஆபத்துக்குள் மாட்டி விடுவதாக அமைந்துவிடும்.

விடுதலைப் புலிகளால் பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள் குறித்து மட்டுமே இந்த உலகத்துக்கு தெரியும். முன்னர் போர் இடம்பெற்ற பகுதிகளில் இருந்து ஒவ்வொரு நாளும் ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் வெடிபொருட்களும் தோண்டி எடுக்கப்பட்டு வருகின்றன.

எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் இவற்றைப் பயன்படுத்தி மீண்டும் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்ற ஆபத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது. எனவே விடுதலைப்புலிகளை கண்டு பிடிப்பதற்காக முகாம்களில் அரசு கட்டுபாடுகளை விதிப்பதன் காரணமாக அந்த முகாம்கள் போர்க் கைதிகளை அடைத்து வைக்கும் தடுப்பு முகாம்கள் என்று அடையாளப்படுத் தக்கூடாது.

முகாம்களிலுள்ளவர்களுக்கு ஓரளவு நடமாட்டச் சுதந்தரம் வழங்கப்பட்டுள்ளது. சோதனை, பதிவு செய்வது மற்றும் அவர்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணங்களை தயார் செய்வது போன்ற நடவடிக்கைள் முடிபடைந்த பின்னர் அவர்களுக்குப் படிப்படியாக முழுமையான நடமாட்டச் சுதந்திரம் வழங்கப்படும்.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள்முடிபடைந்தபின்னரே இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளும்நிறைவடையும். இருப்பினும் மீள் குடியமர்வு தொடர்பில் எதிர் வரும்வாரங்களில் பெரியள விலான முன்னேற்றம் ஏற்படும். நாங்கள் விரும்பும் வகையில் பல இன, பல மொழி, பலபண்பாட்டைக் கொண்ட புதிய இலங்கை ஒன்றை கட்டி யெழுப்புவதற் கான நிறுவன மயப்பட்ட அடித்தளத்தை நாம் மீண்டும் உரு வாக்கி பாதுகாக்க வேண் டியிருக்கின்றது.

எல்லாவிதங்களிலும் மிகச்சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதே எமதுகனவு. அதனை அடைவதற்கு மனித உரிமைகளை பாதுகாப்பது, பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாடு என்பவற்றுடன் அரசியல் மற்றும் பொது உரிமைகள், அபிவிருத்திக்கான உரிமைகள் என்பன மிக முக்கியமானவை.

இடம் பெயர்ந்த மக்கள் குறித்து நாம் எமது உடனடிக்கவனத்தை செலுத்திவருகின்ற போதும், எல்லாமக்களும் சுதந்திர மாகவும் சமத்துவமாகவும் நாளை பற்றிய சிறப்பான எதிர்பார்ப்புடனும் வாழும் வகையிலான புதிய நாடு ஒன்றை உரு வாக்குவதற்காக உழைத்து வருகின்றோம். இவ்வாறு அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார். (ந-5)

## பொலிஸ்...

இருந்தமையால் அவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள முடியாமல் போனது.

எனினும் 5 இடங்களில் நேற்று நடைபெற்ற முதல்கட்ட தேர்வில் 38 பெண்கள் உட்பட 880 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 880 பேருக்கு இன்று காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நேர்முகப் பரீட்சையும் பிற்பகல் யாழ். நகரப் பாடசாலை ஒன்றில் எழுத்துப் பரீட்சையும் நடத்தப்படும்.

இதில் சிறந்த புள்ளியைப் பெறும் 500 பேர் பொலிஸ் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படுவர் என யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட் சகர் மாரப்பன குறிப்பிட்டார். (ச-5)

## அநுராதபுரம்...

கடிதம் மூலம் கோரிக்கைகளை முன்வைத்து அந்த விடயங்கள் நிறைவேறாத பட்சத்தில் நேற்று மதியம் 12 மணியளவில் இருந்து 43 தமிழ்க் கைதிகள் சாகும் வரை உண்ணா விரதத்தில் இருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

தங்களுக்கொரு இறுதியாக ஒரு முடிபு வரும் வ்ரைக்கும் சாகும்வரை உண்ணாவிரதத்தை தொடரப்போவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

அரசாங்க தரப்பிலிருந்து குறிப்பாக நீதி அமைச்சிலிருந்து முக்கியமான அதிகாரிகள் வந்து தங்களுக்கு ஒரு சரியான ஒரு வாக்குறுதியை வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (ச-3)

## மக்களை பராமரிப்பது வாக்குகளை அபகரிக்கவல்ல -ஜனாதிபதி

(கொழும்பு)

நாளொன்றுக்கு கோடிக்கணக்கான நிதியைச் செலவழித்து இடம்பெயர்ந்துள்ள அப்பாவி மக்களை நாங்கள் பராமரிப்பது வாக்குகளை அபகரிப்பதற்காக அல்ல.

அங்குலத் திற்கு அங்குலம் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளின் மேல் இந்த மக்களைத்தள்ளி விட முடியாது.

அரசியலை விட அந்த மக்களின் உயிர்கள் எமக்கு பெறுமதியானவை. அதனால் தான் புலிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் முழு உலகமும் எமக்கு எதிராக நின்ற போதும் நாங்கள் இந்த மக்களை மீட்டெடுத்தோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ச-5)

## தீவகத்தைச்...

298 பேர் காரைநகர் தோப்புக்காடு மீள்குடியேற்ற முகாமில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று சொந்த இடங்களில் மீள் குடிய மர்த்தப்படுவார்கள். (ச-5,246)

SPEED IT NET
நிறுவனம் வழங்கும்
புதிய கற்கைநெறிகள்
Diploma in Web Designing (30 hrs )
Diploma in Hardware Engineering(20hrs)
Diploma in Network Administration (20hrs)
Diploma in VB.net Programming(30hrs)
Diploma in C# Programming (30hrs)
BIT External Degree(3yrs) -Last Chance to optain IT degree
பதிவுகள் யாவும் 29செப்டெம்பர் 2009 இற்கு முன்
72/28 Panikkar Lane ,Thirunelvely Junction
Palaly Road Thirunelvely Jaffna.
Tel: 021 222 8358
பாதை மாறிய பயணங்களால் பலனெதுவும் இல்லை
(C-3388)